இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 34 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 26 – செவ்வாய்க்கிழமை 12 செப்டம்பர் 2023 – வெளியூர் 10 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 34: Thiruvalluvar Year - 2054 - Aavani 26 - Tuesday 12 September 2023 - Dak 10 Pages ₹ 5.00

## ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய

# தியாகி இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம்!



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று, ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இதில் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, கே.ஆர். பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, கயல்விழி செல்வராஜ், தமிழ்நாடு டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், மாவட்டச் செயலாளர்கள் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., ஈ.ராஜா எம்.எல்.ஏ., நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனுஷ் எம்.குமார், கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழரசி ரவிக்குமார், செ.முருகேசன், முன்னாள் எம்.பி. எம்.எஸ்.கே.பவானி ராஜேந்திரன், ஏ.என்.இன்பா ரகு உள்ளிட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை செப். 12-**

**ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காக போராடிய தியாகி இமானுவேல் சேகரனாருக்கு ரூபாய் 3 கோடியில் மணி மண்டபம் கட்டப்படும் என்றும் மணி மண்டபத்தின் உள்ளே அவருக்கு சிலை வைக்கப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இந்த அறிவிப்பிற்கு தியாகி இமானுவேல் சேகரனார் குடும்பத்தினர் நன்றி தெரிவித்துள்ளனர்.**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், இமானுவேல் சேகரனாரின் மகள் திருமதி.சூரிய சுந்தரி பிரபா ராணி மற்றும் அன்னாரது பேரன் சக்கரவர்த்தி ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையினை வலியுறுத்தினர்.



தியாகி இமானுவேல் சேகரனார் அவர்கள் 1924ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பிறந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமம் ஆகும். இவர் 1942இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் சென்றார். மேலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் சமூக பங்களிப்பினைப் போற்றும் வகையில் அவரது பிறந்தநாள் நூற்றாண்டினை யொட்டி அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்குச் சொந்தமான இடத்தில் சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் இமானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

**சமூகப் பங்களிப்பை போற்றுகிறேன்!**

தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளில், அவரது போராட்ட வாழ்வையும் சமூகப் பங்களிப்பையும் நினைவுகூர்ந்து போற்றுகிறேன்.**

**பொதுமக்கள் மற்றும் தியாகி இமானுவேல் சேகரனாரின் வழித்தோன்றல்களின் கோரிக்கையின் படி, அன்னாரின் நூற்றாண்டையொட்டி, இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் சுமார் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்படும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

## 66வது நினைவு நாளையொட்டி

# பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரனார் நினைவிடத்தில் மரியாதை!

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மலர்வளையம் வைத்து அஞ்சலி!

**பரமக்குடி, செப். 12-**

**இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் தியாகி இமானுவேல் சேகரன் 66 வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது நினைவிடத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கழக இளைஞரணி செயலாளர் – விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.**

இந்நிகழ்வில், அமைச்சர்கள் ஆர். எஸ்.ராஜ கண்ணப்பன், தங்கம் தென்னரசு, மூர்த்தி, பெரியகருப்பன், கயல்விழி செல்வராஜ், இராமநாதபுரம் மாவட்ட கழக செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் தனுஷ், டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், மாநில இளைஞரணி துணைச் செயலாளர் ஏ.என்.இன்பாரகு, மாநில மகளிர் அணி துணைத் தலைவர் எம்.எஸ். கே. பவானி ராஜேந்திரன், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த.திவாகரன், நகர் மன்ற. இராமநாதபுரம், பரமக்குடி தலைவர்கள் ஆர்.கே.கார்மேகம், சேது கருணாநிதி, துணைத்தலைவர் டி.ஆர்.பிரவீன் தங்கம், ஒன்றிய செயலாளர்கள் கமுதி வி. வாசுதேவன், பரமக்குடி ஜெயக்குமார், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா, துணை அமைப்பாளர்கள், குமரகுரு, சன் சம்பத்குமார் உள்ளிட்ட திரளான கழகத்தினர் பங்கேற்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

**அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேட்டி!**

அதனைத் தொடர்ந்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில், இமானுவேல் சேகரனின் குடும்பத்தார் மற்றும் பொதுமக்கள், கொடுத்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதல்வர் அவர்கள் ரூ.3 கோடி மதிப்பில் முழு உருவ வெண்கலச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் கட்டுவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்றார். இந்த அறிவிப்பிற்கு அவரது மகள் சுந்தரி பிரபா ராணி மற்றும் குடும்பத்தார்களும் சமூகத்தினரும் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

மேலும் சமூக நீதிக்காக போராடிய அவரை போற்றும் வகையில் அனைவரும் சமூகநீதிக்காக போராட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, கிளைக் கழக பொறுப்பாளர்கள், தொண்டர்கள், ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## உச்சநீதிமன்றத்தில்

# எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கு!

### தமிழ்நாடு அரசு மேல்முறையீடு!

*புதுடெல்லி, செப். 12 -*

*எடப்பாடி பழனிசாமி மீதான டெண்டர் முறைகேடு வழக்கில், தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது.*

*எடப்பாடி பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது, நெருங்கிய உறவினர்களுக்கு நெடுஞ்சாலைத் துறையில் டெண்டர் வழங்கி, 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பில் முறைகேடு நடந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.*

*இதனையடுத்து, தி.மு.க அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி, கடந்த 2018ம் ஆண்டில் இந்த முறைகேடு தொடர்பாக சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். எடப்பாடி பழனிசாமி தன்னுடைய நெருங்கிய உறவினர்களுக்கு டெண்டர்களை வழங்கி முறைகேடு செய்ததாக மனுவில் தெரிவித்திருந்த ஆர்.எஸ்.பாரதி, இந்த டெண்டர் முறைகேடு மூலமாக அரசுக்கு இழப்பீடு ஏற்படுத்தியதாகக் கூறி, சிறப்பு விசார ணைக்குழு மூலம் விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொண்டிருந்தார்.*

*மனுவை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், வழக்கில் சிறப்பு புலனாய்வு விசாரணை தேவையில்லை என உத்தரவிட்டது.*

*இந்நிலையில், சென்னை உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீட்டு மனு தாக்கல் செய்துள்ளது.*

## கடும் எதிர்ப்பையும் மீறி விஸ்வகர்மா யோஜனா திட்டம்

# பிரதமர் மோடி தொடங்கி வைப்பதற்குக் கண்டனம்!

### குலத் தொழிலை ஊக்குவிக்கும் என எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, செப். 12-*

*கடும் எதிர்ப்பையும் மீறி குலத் தொழிலை ஊக்குவிக்கும் விஸ்வகர்மா யோஜனா திட்டத்தை பிரதமர் மோடி வரும் 17ஆம் தேதி தொடங்கி வைக்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஒன்பது ஆண்டுகளாக கடனுதவி வழங்காத ஒன்றிய அரசு தற்போது தேர்தலுக்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளதாக எதிர்க் கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.*

*மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க. அரசு, விஸ்கர்மா யோஜனா என்ற ஒரு திட்டத்தை அறிவித்து, இதை செயல்படுத்தும் வகையில் 13 ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியுள்ளது. பிரதமர் மோடியின் இந்த திட்டமானது குலத் தொழிலை ஊக்குவிக்கும் வகையில் அமைந்துள்ளதாக எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.*

*இந்நிலையில், குலத் தொழிலை ஊக்குவிக்கும் வங்கி கடனுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்படும் நிலையில், அதனை செயல்படுத்த ஒன்றிய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. அதன்படி, செப்.17 ஆம் தேதி பிரதமர் மோடி காணொலி காட்சி மூலம் இந்த திட்டத்தை தொடங்கி வைக்கிறார். நாடு முழுவதும் 70 இடங்களில் 70 ஒன்றிய அமைச்சர்கள் கலந்து கொண்டு அதனை தொடங்கி வைக்கிறார்கள்.*

*நகை தயாரிப்பு, தச்சு, சலவை, முடிதிருத்துதல், நெசவு உள்ளிட்ட தொழில்களில் ஈடுபடும் இளைஞர்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் விஸ்வகர்மா திட்டத்தை செயல்படுத்துவதாக ஒன்றிய அரசு அறிவித்துள்ளது. இந்த திட்டத்தின் மூலம் அனைத்து தொழில்களுக்கும் கடனுதவி வழங்க வேண்டும்.*

*குறிப்பிட்ட பிரிவினரை மீண்டும் அதே குலத் தொழிலுக்குள் தள்ளிவிடும் நிலைபாட்டை பா.ஜ.க. அரசு செய்யக் கூடாது என்று பல்வேறு அரசியல் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. ஒன்பது ஆண்டுகளாக கடனுதவி வழங்காத ஒன்றிய அரசு தற்போது தேர்தலுக்காக இந்த திட்டத்தை அறிவித்துள்ளதாக எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன.*

## ஜி 20 மாநாட்டிற்காக 300% கூடுதல் செலவு!


புதுடெல்லி, செப். 12–

ஜி 20 மாநாட்டிற்காக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக செலவு செய்திருப்பது அம்பலமாகியுள்ளது.

20 நாடுகளை கொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லி பிரகதி மைதானத்தில் உள்ள பாரத் மண்டபத்தில் 2 நாட்கள் நடைபெற்றது. மாநாட்டின் நிறைவில், ஜி20 அமைப்பின் தலைமை பொறுப்பை பிரேசிலிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில், ஜி 20 மாநாட்டிற்காக ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக செலவு செய்திருப்பது அம்பலமாகியுள்ளது. ஜி 20 மாநாட்டிற்காக கடந்த ஒன்றிய நிதிநிலை அறிக்கையில் 990 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் மாநாட்டிற்கு 4 ஆயிரத்து 100 கோடி ரூபாய் அளவிற்கு செலவு செய்யப்பட்டுள்ளது.

நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையைவிட 300 சதவீதம் கூடுதலாக, அதாவது 3 ஆயிரத்து 110 கோடி ரூபாய் கூடுதலாக செலவு செய்யப்பட்டிருப்பது தற்போது தெரியவந்துள்ளது.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 12-09-2023

# குலத்தொழிலை ஊக்குவிக்கும் ஒன்றிய அரசு!

**சனாதனம் என்றால் என்ன என்று பரப்புரை செய்ய ஒன்றிய அமைச்சர்களுக்கு உத்தரவிட்டுள்ளார் பிரதமர் மோடி. அவர் அறிவித்துள்ள 'விஸ்வ கர்மா யோஜனா' திட்டத்தின் உள்ளடக்கமே சனாதனம்தான். தந்தை தொழிலை மகன் தொடர வேண்டும் என்பதே சனாதனம். குலத் தொழிலை எவரும் மாற்றிக் கொள்ளக் கூடாது என்பதுதான் சனாதனம். அதற்காகவே ஒரு திட்டம் போடுகிறார் பிரதமர்.**

ஆகஸ்ட் 15 அன்று கொடியேற்றிவிட்டு பிரதமர் பேசும் போது குலத்தொழிலைச் செய்பவர்கள் தங்களது குடும்பத் தொழிலைத் தொடர்ந்து செய்தால் நிதி கொடுப்போம் என்று அறிவித்தார். இராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தின் மறுபதிப்புதான் இது.

விஸ்வகர்மா யோஜனா - என்ற திட்டம் 18 வகையான ஜாதிகளை அடையாளம் காட்டுகிறது. அவர்களது பரம்பரைத் தொழிலுக்கு ஊக்கம் அளிப்பதன் மூலமாக குலத் தொழிலை ஊக்குவிக்கிறது. பரம்பரையாக தொழில் செய்பவர்களுக்கு கடனுதவி வழங்கும் திட்டம் இது.

**பரம்பரைத் தொழில்களைச் செய்பவர்கள் என்றால் அனைத்துத் தொழில்களையும் சொல்லாமல் 18 தொழில்கள் மட்டும் என வரையறுத்தது ஏன்?**

இந்தத் திட்டத்தில் சேர்பவர்கள் பரம்பரை பரம்பரையாக அந்தத் தொழிலை செய்பவர்களாக இருக்க வேண்டும். செருப்பு தைப்பவர் பரம்பரை பரம்பரையாக இந்தத் தொழிலை செய்து வருகிறேன் என சான்றிதழ் வாங்கி வர வேண்டும். இந்தத் தொழிலாளி ஒருவர் தனது தொழிலை விரிவுப்படுத்தி, வேறு ஒரு பொருளை தயாரித்தால் அவருக்கு நிதி உதவி கிடையாது. பி.எம்.விஸ்வகர்மா என்ற திட்டத்தை 16.8.2023 அன்று அமைச்சரவையின் பொருளாதாரக் குழு ஏற்று 13 ஆயிரம் கோடி பணத்தையும் ஒதுக்கி இருக்கிறது. 2023 முதல் 2028 முதல் குலத் தொழில் செய்ய வாரிசுகளுக்கு அவர்களது குடும்பத்தினர் கற்றுக் கொடுப்பார்களாம்.

பதினெட்டு பரம்பரைத் தொழில்கள் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

**1. தச்சர், 2. படகு தயாரிப்பாளர், 3. கவசம் தயாரிப்பவர்**
**4. கொல்லர், 5. சுத்தியல் மற்றும் கருவிகள் தயாரிப்பவர்**
**6. பூட்டு தயாரிப்பவர், 7. பொற்கொல்லர், 8. குயவர்**
**9. சிற்பி, 10.காலணி தயாரிப்பவர், 11. கொத்தனார்**
**12. கூடை, பாய், துடைப்பம் தயாரிப்பவர்**
**13. பொம்மை தயாரிப்பவர், 14. முடி திருத்துபவர்**
**15. பூமாலை தொடுப்பவர், 16. சலவைத் தொழிலாளர்**
**17. தையலர், 18. மீன்பிடி வலை தயாரிப்பவர்**

இதனை செய்யப் பழகுவோருக்கு ஒரு லட்சம் முதல் 2 லட்சம் வரை மானியத்தில் கடன் கிடைக்கும்.

தச்சன் மகன் தச்சுத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் - சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலைத்தான் செய்ய வேண்டும் - முடிதிருத்தும் தொழிலாளி மகன் வாழ்க்கை முழுக்க முடிவெட்டத்தான் வேண்டும் - என்பதை ஊக்குவிக்கிறார் பிரதமர். அதற்குத்தான் இந்தத் திட்டம். அவரவர்க்கு விதிக்கப்பட்ட தொழிலை மட்டுமே அவரவர் செய்ய வேண்டும் என்பதுதான் மனுவின் கட்டளை. அதுதான் சனாதன தர்மம். அதை மீறக் கூடாது என்பதற்காகவே இப்படி ஒரு திட்டத்தை கொண்டு வருகிறார் பிரதமர்.

அனைத்துக் கட்சிகளையும் கூட்டி ஆலோசனைக் கூட்டம் நடத்தி இதனைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றினார் திராவிடர் கழகத் தலைவர் மானமிகு ஆசிரியர் கி.வீரமணி அவர்கள். இக்கூட்டத்தின் முடிவுப்படி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் சென்னையில் நடந்துள்ளது.

குலத் தொழில் கூடாது. ஏழை எளிய - பிற்படுத்தப்பட்ட - பட்டியலின - பழங்குடி மக்களும் உயர்ந்த பொறுப்புகளுக்கு வர வேண்டும் என்று திராவிட இயக்கம் போராடியது. திராவிட மாடல் ஆட்சி திட்டங்கள் தீட்டி வருகிறது. ஆனால் குலத் தொழில் செய், உனக்கு மானியம் தருகிறேன் என்கிறார் பிரதமர்.

இவர்களது அனைத்து தர்மங்களும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டவைதான். இந்தத் திட்டமும் பிறப்பை அடிப்படையாகக் கொண்டதுதான்.

இராஜாஜி குலக்கல்வி திட்டத்தை கொண்டு வந்தபோது தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள்: **"நாம் மேன்மையடையக் கூடாது என்பதற்காகவே இராஜாஜி இந்த திட்டத்தைக் கொண்டு வருகிறார். நம்மை உத்தியோகத்துக்கு லாயக்கு ஆக்கக் கூடாது என்பதற்காக கொண்டு வந்த திட்டம் இது"** என்று சொன்னார் பெரியார்.

**"ஆயிரக்கணக்கான வருடங்களாக கூலிக்காரன் மகன் கூலிக்காரன், மேளம் அடிக்கிறவன் மகன் மேளம் அடிப்பவன், உழுபவன் மகன் உழுபவன் என்றே வைத்துவிட்டார்கள். வெள்ளைக்காரன் வந்துதான் 200 ஆண்டுக்கு முன் இதனை மாற்றினான். இதெல்லாம் தலையெழுத்து என்று நினைக்க வைத்துவிட்டார்கள். இந்தத் தலையெழுத்தை மாற்ற கவலைப்பட்டது நமது இயக்கம் மட்டும்தான். வண்ணார் மகனும், நாவிதன் மகனும் படித்துவிட்டால் உயர்ஜாதிக்காரனுக்கு மரியாதை போய்விடும். அதனால்தான் குலத் தொழிலையே செய்தால் போதும் என்கிறார்கள்"** என்பதை தெளிவுபடுத்தினார் பெரியார்.

சாதியை தொழிலாகவும் - தொழிலாளிகளை சாதி ரீதியாகவும் பிரித்ததைப் பற்றி அண்ணல் அம்பேத்கர் விரிவாக எழுதி இருக்கிறார். **'உன் தொழிலில் லாபமில்லை என்றால் அது உன் கர்மா என்றும், லாபமில்லாத தொழிலை விட்டு இன்னொரு தொழிலைச் செய்யத் தடை செய்வதும்தான் இதில் உள்ள கொடூரம்'** என்பதையும் அண்ணல் அம்பேத்கர் சொல்லி இருக்கிறார். **'தொழிலைக் கற்றுத் தருகிறோம் என்பதற்குள்ளாக சாதியைக் கெட்டிப்படுத்தும் தந்திரம் இருக்கிறது'** என்பதையும் அண்ணல் சொன்னார்.

இந்தக் காலத்தில் சமூகநீதி - இடஒதுக்கீடு - நவீன மயம் - விழிப்புணர்வு ஆகியவற்றால் பலரும் ஜாதி அடையாளம் கொண்ட தொழிலில் இருந்து வெளியேறுகிறார்கள். இதனைத் தாங்கிக் கொள்ள முடியாமல் தடுக்கவே இத்தகைய திட்டங்களைக் கொண்டு வருகிறார் பிரதமர் மோடி. சனாதனக் காப்புத் திட்டங்களைக் கொண்டு வரும் மோடி தான், 'சனாதனத்தை' விளக்கி பிரச்சாரம் செய்யச் சொல்கிறார்.

இதனை ஏன் ஒன்றிய அமைச்சரவையில் சொல்கிறார். சனாதனம் பா.ஜ.க. ஆட்சியின் கொள்கை - அதனால் சொல்கிறார். **சனாதனத்தை எதிர்த்த முதலமைச்சரின் அறிக்கையை தமிழ்நாடு அரசின் செய்தித்துறை வெளியிட்டதாம்? உடனே 'தினமலர்' திகில் ஆகிறது. சனாதனத்தை ஆதரித்து அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் பேசலாம் என்றால், ஒன்றிய அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யலாம் என்றால் முதலமைச்சரின் அறிக்கையை செய்தித் துறை வெளியிட்டது என்ன தவறு?**

**அவர் செய்யலாம் இவர் செய்யக் கூடாது என்பதுதான் சனாதனம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2023) செங்கல்பட்டு மாவட்டம், வடநெம்மேலியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே.சண்முகநாதன் அவர்களின் பெயர்த்தி டாக்டர் ஆர்.ஷாலினி, டாக்டர் எஸ்.ஷியாம் விக்னேஷ் குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி செல்வி செல்வம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

## நாட்டின் பெயரை மாற்றி வரலாற்றை அழிக்க முயற்சி!

# இந்து மதத்திற்கும் பா.ஜ.வுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை!

## பிரான்சில் - ராகுல் கடும் விமர்சனம்!

லண்டன், செப். 12 -

"இந்து மதத்திற்கும், பா.ஜ. வுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நாட்டின் பெயரை மாற்றி அவர்கள் வரலாற்றை அழிக்க முயற்சிக்கின்றனர்" என பாரிசில் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் மத்தியில் ராகுல் காந்தி பேசினார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு ஒரு வார கால சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி, பெல்ஜியத்தை தொடர்ந்து பிரான்ஸ் தலைநகர் பாரிசுக்கு நேற்று முன்தினம் சென்றார். அங்குள்ள சயின்ஸ் பிஓ பல்கலைக்கழகத்தில் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்கள் முன்னிலையில் உரையாற்றிய ராகுல் கூறியதாவது:

நான் கீதையை படித்திருக்கிறேன். பல உபநிடதங்களை படித்திருக்கிறேன். பல இந்து புத்தகங்களை படித்திருக்கிறேன். ஆனால் எதிலும் பா.ஜ. கட்சி செய்கின்ற எந்த செயலும் இந்து மதத்தில் கூறப்பட்டதில்லை. முற்றிலும் எதுவுமே இல்லை. உங்களை விட பலவீனமானவர்களை பயமுறுத்த வேண்டும், தீங்கு செய்ய வேண்டும் என எந்த இந்து புத்தகத்திலும், கற்றறிந்த இந்துக்கள் மூலமும் நான் கேள்விப்பட்டதில்லை.

எனவே இந்து தேசியவாதிகள் என்று அவர்களை கூறும் வார்த்தை முற்றிலும் தவறானது. அவர்கள் இந்து தேசியவாதிகள் அல்ல. இந்து மதத்திற்காக அவர்கள் எதையும் செய்ததில்லை. அதிகாரத்தை பெறுவதற்காக அவர்கள் எந்த விலையை வேண்டுமானாலும் கொடுப்பார்கள். ஒரு சிலரின் ஆதிக்கத்தை அவர்கள் விரும்புகிறார்கள். மற்றபடி அவர்களுக்கும் இந்து மதத்துக்கும் எந்த சம்மதமும் இல்லை.



### அதற்கான விலையைக் கொடுத்தே தீரவேண்டும்!

தாழ்த்தப்பட்ட, இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினர், சிறுபான்மை மக்களை பா.ஜ.வும், ஆர்.எஸ்.எஸ்சும் தடுக்கின்றன. என்னைப் பொறுத்த வரை, ஒரு தலித் நபர் அல்லது ஒரு இஸ்லாமியர், பழங்குடி, உயர் சாதியை சேர்ந்தவர், இப்படி யாராக இருந்தாலும் அவர் தவறாக நடத்தப்படக் கூடிய, தாக்கப்படக் கூடிய இந்தியா, நிச்சயம் நான் விரும்பும் இந்தியா அல்ல. இந்த பிரச்சினையை நேரடியாக எதிர்த்து போராட ஆழமான அரசியல், சமூக உணர்வு தேவை. அந்த போராட்டத்தில் எதிர்க்கட்சிகள் உறுதியாக இருக்கின்றன.

இந்தியாவில் வன்முறை இருக்காது, அதிகார அடக்குமுறை இருக்காது என நாளை காலை பிரதமர் முடிவெடுத்தால் அத்தகைய எல்லா பிரச்சினைகளும் அடங்கிவிடும். ஒரு தலைமை காட்டும் திசை தான் மக்களை வழிநடத்தும். ஆனால் இப்போது உள்ள நிலை என்னவென்றால், நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்யலாம், உங்களை யாராலும் எதுவும் செய்ய முடியாது என்பதுதான். இது இந்தியாவின் ஆன்மா மீதான தாக்குதல். இதைச் செய்பவர்கள், அதற்கான விலையை கொடுத்தே தீர வேண்டும். நமது வருங்கால சந்ததியினருக்கு நம் வரலாற்றை தெரியவிடாமல் அழிக்க முயல்கின்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## ரூ. 58 கோடியில் செட்டிநாடு வேளாண்மை கல்லூரி கட்டிட அடிக்கல் நாட்டு விழா!

# சிவகங்கை மாவட்டத்திற்கு கடந்த 2 ஆண்டுகளில் பல்வேறு அரசு திட்டங்கள் அறிவிப்பு!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

*சிவகங்கை, செப். 12 -*

*சிவகங்கை மாவட்டம் காரைக்குடி தாலுகா செட்டிநாட்டில் கடந்த 2022 ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் அறிவியல் ஆராய்ச்சி கல்லூரி துவங்கப்படும் என்று முதல்வர் அறிவித்து அந்த கல்லூரி தற்பொழுது செயல்பட்டு வருகிறது. இந்த கல்லூரியில் ரூபாய் 58 கோடியில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் கட்டுமான பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா அஜித் தலைமையில் முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப. சிதம்பரம் எம்.பி. முன்னிலையில் நடைபெற்றது.*



*இந்த நிகழ்ச்சியில் ரூபாய் 58 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்களுக்கான கட்டுமான பணிகளை துவக்கி வைத்து கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன் பேசியதாவது:-*

*தமிழக முதல்வர் அவர்கள் பதவி ஏற்ற இரண்டரை ஆண்டுகளில் தேர்தல் வாக்குறுதலில் 85 சதவிகித வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளார். அதில் ஒரு வாக்குறுதியான சிவகங்கை மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி அமைக்கப்படும் என்பதை செட்டிநாட்டில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அறிவிக்கப்பட்டு கடந்த 2022ஆம் ஆண்டு முதல்வரால் துவக்கி வைக்கப்பட்டது. தற்போது அனைத்து வசதிகளுடன் கூடிய நவீன கட்டிடம் கட்டுமானப் பணிகள் ரூபாய் 58 கோடி நிதி ஒதுக்கப்பட்டு அதற்கான பணிகளும் துவங்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் நிறைவேற்றப்படுவதால் இப்பகுதி வளர்ச்சி அடையும் . அதற்கு இது ஒரு சான்றாக அமைந்துள்ளது.*

*அனைத்து கட்டமைப்புகளையும் உருவாக்குவதில் கழக அரசுக்கு ஈடாக எந்த அரசும் தமிழகத்தில் அமைந்ததில்லை. இதற்கு பல சான்றுகள் உள்ளது. கடந்த 2006 - 2011ல் முதல்வராக தலைவர் கலைஞர் இருந்தபோது சிவகங்கை மாவட்டத்திற்கு அரசு மருத்துவக் கல்லூரி வழங்கினார். குடிநீர் பிரச்சினையை தீர்க்கும் வகையில் ரூபாய் 620 கோடியில் காவிரி கூட்டு குடிநீர்த் திட்டத்தினை புதுக்கோட்டை, சிவகங்கை, ராமநாதபுரம், மாவட்டத்தில் செயல்படுத்தினார். இது தவிர பல்வேறு திட்டங்களையும் அறிவித்து செயல்படுத்தினார்.*

*அவரது வழியில் நமது முதல்வர் தளபதி அவர்களும் சிவகங்கை மாவட்டத்திற்கு பல்வேறு திட்டங்களை அறிவித்துள்ளார். அதில் முத்தாய்ப்பான திட்டம்தான் செட்டிநாட்டில் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மையமாகும். தொடர்ந்து நமது மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை முதல்வர் அறிவித்து அதை செயல்படுத்தியும் வருகிறார். தொடர்ந்து நமது மாவட்டத்திற்கு வளர்ச்சி திட்டங்களை வழங்கிவரும் முதல்வருக்கு மக்கள் தொடர்ந்து தங்களுடைய ஆதரவினை தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அமைச்சர் அமைச்சர் பெரிய கருப்பன் பேசினார்.*

*விழாவிற்கு முன்னிலை வகித்த முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி. பேசியதாவது:-*

*தமிழக முதல்வர் அவர்கள் முதல் நிதிநிலை அறிக்கையில் இந்த வேளாண்மை கல்லூரிமற்றும் ஆராய்ச்சி மையம் திட்டத்தினை அறிவித்து அது செயல்பட்டு வருகிறது. இது மிகவும் ஒரு மகிழ்ச்சியான செய்தியாகும். 75 வேளாண்மை பட்டதாரிகள் இங்கு பயில உள்ளார்கள். மூன்றாவது ஆண்டில் பெண்களும் படிக்க உள்ளார்கள். அப்போது நான்கில் மூன்று பங்கு பெண்களும் ஒரு பங்கு ஆண்களும் இந்த கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.*

*பெண்கள் வேளாண்மை பட்டத்தை அதிகம் பெற வேண்டும். அரசு பெண் கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் தருகிறது என்பதை இதன் மூலம் உணர்ந்து கொள்ள முடியும். இத்தகைய திட்டங்களினால் தமிழகம் முன்னேற்றம் அடைந்து வருகிறது என்பது தெரிய வருகிறது.*

*முன்பெல்லாம் பெண்கள் நாற்று நடுவதும் களை பறிப்பதும் மட்டும்தான் செய்து வந்தார்கள். ஆனால் தற்போது ஆண்களுக்கு இணையாக பெண் விஞ்ஞானிகளும் உருவாகி வருகிறார்கள் என்பதை இக்கல்லூரி அமைந்ததற்கான சான்று ஆகும். இதற்காக தமிழக முதல்வர் அவர்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. பேசினார்.*

*நிகழ்ச்சியில் கார்த்தி ப.சிதம்பரம் எம்.பி., எஸ். மாங்குடி எம்.எல்.ஏ. வேளாண்மை கல்லூரி இயக்குனர் முனைவர் கீதா லட்சுமி, வேளாண் கல்லூரி ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாபு ஆகியோர் வாழ்த்திப் பேசினார்கள்.*

*நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், ஒன்றியச் செயலாளர்கள் சுப. சின்னதுரை, கே.ஆர்.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர் பள்ளத்துார் கே.எஸ்.ரவி, என்.குணசேகரன், எஸ். முத்துதுரை, திருமதி ராதிகா, கார்த்திக் சோலை உட்பட பலர் கலந்து கொண்டனர்.*

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; ஜி20 மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பிய அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியப் பிரதமர் மோடிக்கு அறிவுரை கூறியிருக்கிறாராமே ?

**பெரியதம்பி :** ஆமாம் தம்பி; **இந்தியாவில் மனித உரிமைகள் அனைத்தையும் காலில் போட்டு மிதித்து வருவதையும், ஊடகங்களின் சுதந்திரத்தில் தலையை நுழைத்து அச்சுறுத்துவதையும், கருத்தில் கொண்டு; மனித உரிமைகளை மதிக்க வேண்டும்; இந்தியாவைக் கட்டி எழுப்புவதில் பொதுமக்கள் மற்றும் சுதந்திரமான ஊடகங்களுக்கு உள்ள பங்கை உணர்ந்து செயல்பட வேண்டும்; என்ற மனித உரிமைகள் மற்றும் ஊடகச் சுதந்திரம், ஆகிய இரண்டு முனைகளில் இந்தியப் பிரதமர் சறுக்கி வருவதைக் கவனப்படுத்தி அறிவுரை வழங்கியிருக்கிறார் ஜோ பைடன் ! மிகவும் தேவையான அறிவுரைகள்தான் !**

திருப்பத்தூர் மாவட்டத்தில் – சாலை விபத்தில்

# உயிரிழந்த 7 பேர் குடும்பத்தினருக்கு தலா ரூ.1 லட்சம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 12-

திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏற்பட்டசாலைவிபத்தில்உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி - அளித்து முதலமைச்சர்மு.க.ஸ்டாலின் அவர்கள்அறிவிப்புவெளியிட்டுள்ளார்.

வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைஅடுத்தஓணான் குட்டை கிராமத்தைச் சேர்ந்த 24நபர்கள்கடந்த8.9.2023 அன்றுதனியார்சுற்றுலாமினி பேருந்து மூலம் பெங்களூருக்கு சுற்றுலா சென்றுவிட்டு நேற்று (11.9.2023) சொந்த ஊர் திரும்பி வரும் பொழுது திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி காவல்நிலைய எல்லைக்குட்பட்டசண்டியூர்என்ற இடத்தில் வாகன பழுது காரணத்தினால் தேசியநெடுஞ்சாலை சென்டர்மீடியன் ஓரத்தில் நிறுத்தி சரிசெய்து கொண்டிருந்தனர். அப்போது இதில் பயணித்த பயணிகள் நிறுத்தப்பட்ட வாகனத்தின் முன் அமர்ந்திருந்தனர். அப்போது பின்னால் வந்த லாரி மினி பேருந்தின் மீது எதிர்பாராதவிதமாக மோதி ஏற்பட்ட விபத்தில் பழுதடைந்த வாகனத்தின் முன்னால் அமர்ந்திருந்த திருமதி.செல்வி (எ) சேட்டம்மாள், க/பெ.பழனி (வயது 55),திருமதி.மீரா,க/பெ.முனுசாமி (வயது 51), திருமதி. தேவகி, க/பெ.சண்முகம் (வயது50),திருமதி.கலாவதி, க/பெ.குப்புசாமி (வயது 50), திருமதி.சாவித்ரி, க/பெ.குப்பன் (வயது 42), திருமதி. கீதாஞ்சலி, க/பெ.ரஞ்சித் (வயது 35) மற்றும் திருமதி. தெய்வானை, க/பெ. திலீப்குமார்(வயது32)ஆகிய ஏழு பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடுஅவர்களது குடும்பத்தினருக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

மேலும்இவ்விபத்தில்காயமடைந்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரிமருத்துவமனையில் சிகிச்சைபெற்று வருபவர்களுக்கு நிவாரணத் தொகையாக தலா ஐம்பதாயிரம்ரூபாய்வழங்கிடவும்அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சை அளிக்கவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின்அவர்கள்தெரிவித்துள்ளார்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; 'பாரத் பெயர் மாற்றம் பிடிக்காதவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம்' என்று மேற்கு வங்க மாநில பா.ஜ.க. எம்.பி. திலிப் கோஷ் என்பவர் எச்சரித்திருக்கிறாரே ?

**பட்டணம் :** ஆமாம் அய்யா; **அது மட்டுமா; 'பா.ஜ.க., மேற்கு வங்கத்தில் ஆட்சிக்கு வந்தால், எல்லா வெளி நாட்டவர் சிலைகளையும் அகற்றுவோம்' என்றும் வாய் நீளம் காட்டியிருக்கிறார்.**

**'நாட்டைவிட்டு வெளியேறலாம்' என்பவர்கள், மீண்டும் ஒன்றிய ஆட்சிக்கு வந்தால், 'பாரத் பெயர் பிடிக்காதவர்கள் தேசத் துரோகிகள்' என்ற பட்டத்தைச் சூட்டி, 'நாடு கடத்தப் படுவார்கள்', 'நாட்டைவிட்டே வெளியேற்றப் படுவார்கள்' என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.**

**வெளிநாட்டவர் சிலைகளை அகற்றுவோம் - என்பவர்கள்; வெளிநாட்டவர் இங்கே விட்டுச்சென்றுள்ள அடிப்படைக் கட்டமைப்புகளையும் அழித்தொழிப்பார்களா ?**

**அந்த அளவுக்கு அவர்களுக்கு மண்டைக்கனம் அதிகமாகிவிட்டது; மத வெறி அவர்களை ஆட்டி வைக்கிறது.**

**நாடு நலம் பெற வேண்டும் என்ற நாட்டம் கொண்டவர்கள், எச்சரிக்கையாக இருக்க வேண்டிய கட்டம் இது. அத்துடன் அந்த எச்சரிக்கை உணர்வை மற்றவர்களுக்கும் 'ஷேர்' செய்து, கொடுங்கோலர்களின் கோரப் பிடியிலிருந்து மக்களை விடுவிக்க முன்வர வேண்டும் !**

பொதுமக்கள் விரும்பும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள்!

# 10 வருடங்களுக்குப் பிறகு கிராமங்களில் பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றன!

## செட்டியபட்டியில் ஐ.பெரியசாமி பெருமிதம்!

ஆத்தூர் , செப்.12-

கிராம ஊராட்சிகளில் அனைத்து கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் விரும்பும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்று செட்டியபட்டி ஊராட்சியில் பள்ளிகளை ஆய்வு செய்ய வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். 10வருடங்களுக்கு பிறகு கிராமங்களில் உள்ள பள்ளிகள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மேம்படுத்தப்படுகின்றன என ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள செட்டியபட்டி, வீ. கூத்தம்பட்டி, பஞ்சம் பட்டி, முருகம்பட்டி, மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட டி.பண்ணைப்பட்டி, கே. புதுக்கோட்டை, கொண்டமநாயக்கன்பட்டி, கோனூர், ஆகிய கிராமங்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக கடந்த தி.மு.க. ஆட்சியின் போது 10வருடங்களுக்கு முன்பு தரம் உயர்த்தப்பட்டன.

வருவாய்துறை அமைச்சராக இருந்த ஐ.பெரியசாமி அவர்களின் சீரிய முயற்சியால் ஆத்தூர் தொகுதியில் 10க்கும் மேற்பட்ட பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதோடு கிராமப்புற மாணவர்கள் சிரமமின்றி பள்ளிக் கல்வி பயிலும் நிலைக்கு உயர்ந்தனர். அதன்பின்பு கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது கடந்த 10வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் எந்த ஒரு பள்ளியும் தரம் உயர்த்தப்படவில்லை.

தற்போது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் குக்கிராமங்களில் உள்ள பள்ளி கட்டிடங்கள் கூட தரமானதாக கட்டிக் கொடுக்கப்படுவதோடு கிராம ஊராட்சிகளில் உள்ள பள்ளிகளில் கூடுதல் பள்ளி வகுப்பறைகள் நவீன வசதியுடன் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. செட்டியபட்டி ஊராட்சி கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று அங்குள்ள மேல்நிலைப்பள்ளியை ஆய்வு செய்ய வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி செட்டியபட்டி ஊராட்சியில் செட்டியபட்டி மற்றும் கல்லுப்பட்டியில் மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுவதை பார்வையிட்ட அவர் கூடுதல் வகுப்பறைகள் நபார்டு நிதியுடன் கட்டும்போது ஒரே இடத்தில் மேல்நிலை பள்ளி படிக்கும் மாணவர்கள் நவீன வசதியுடன் புதிய வகுப்புறை கட்டிடம், மற்றும் ஆய்வக வசதி, விளையாட்டு மைதானத்துடன் மாணவர்கள் படிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் அதனால் செட்டியபட்டி மற்றும் கல்லுப்பட்டியில் எந்த கிராமத்தில் கூடுதல் வகுப்பறைகள் வேண்டும் என்பதை செட்டியபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து கிராம மக்களின் கருத்தினை கேட்ட பொது மக்கள் விரும்பும் இடங்களில் உள்ள பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றார்.

அதற்காக கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு சிறப்பு கருத்து கேட்பு கூட்டத்தை ஊராட்சிமன்ற தலைவர் ராஜா ஏற்பாடு செய்ய வேண்டுமென உத்தரவிட்டார்.

ஆய்வின் போது வட்டாட்சியர் வடிவேல்முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நசாரூதீன், நேர்முக உதவியாளர் கதிரேசன், ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், திமுக நிர்வாகி அம்பை ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லாரன்ஸ், தட்சினாமூர்த்தி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், ஒன்றிய பொருளாளர் ஜாதிக்கவுண்டன்பட்டி கருப்பையா, ஊராட்சிமன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, பிள்ளையார்த்தம் உலகநாதன், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, காந்திகிராமம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஜெயராமன், செட்டியபட்டி அரசு மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர் சிவசுப்பிரமணியன், உதவி தலைமையாசிரியர் சீனிவாசன், செட்டியபட்டி ஊராட்சி செயலாளர் வேல்முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர். அப்பகுதியைச்சேர்ந்த பொதுமக்கள் கொடுத்த கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு வழங்கியதால் பொது மக்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.

மக்களவைத் தேர்தலில்

# 'இந்தியா' கூட்டணிக்கு 60 சதவீத ஓட்டு உறுதி!

## மல்லிகார்ஜுன கார்கே அதிரடி!

பெங்களூரு, செப். 12 -

மக்களவை தேர்தலில் இந்தியா கூட்டணிக்கு ஏற்கனவே 60 சதவீத ஓட்டு உறுதி என்று காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்துள்ளார்.

2024ம் ஆண்டு மக்களவை தேர்தலுக்கு காங்கிரஸ் மற்றும் பா.ஜ. தலைமையிலான கூட்டணிகள் தீவிரமாக தயாராக தொடங்கிவிட்டன. இதுகுறித்து பேசிய மல்லிகார்ஜுன கார்கே, "கர்நாடகாவில் பா.ஜ. - ம.ஜ.த. கூட்டணி அமைவதற்கான சமிக்ஞைகள் உள்ளன.



அவர்களால் காங்கிரஸ் கட்சியை அசைக்க முடியாது. நாங்கள் கர்நாடகாவில் சொந்த காலில் நின்று தேர்தலை எதிர்கொள்வோம்.

மக்களவை தேர்தலுக்காக நாடு முழுவதும் உள்ள 2628 கட்சிகள் இந்தியா கூட்டணியில் ஒன்றிணைந்திருக்கிறோம். அதனால் 60 சதவீதம் ஓட்டு எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கு உறுதியாகிவிட்டது. 60 சதவீதம் ஓட்டு இந்தியா கூட்டணிக்கு உறுதியாகிவிட்டதால், தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெறும் 40 சதவீதம் ஓட்டுகள் மட்டுமே எஞ்சியிருக்கிறது. ஜனநாயக முறைப்படி கண்டிப்பாக நாங்கள் வெற்றி பெறுவோம்' என்று கார்கே நம்பிக்கை தெரிவித்தார்.

அமைச்சர் ஆர்.காந்தி – ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. வாழ்த்து!

# ஆர்க்காடு சூரியன் ரவி இல்ல மணவிழா!

## ஈஸ்வரன் எம்.எல்.ஏ. - ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஏ.வி.சரவணன் - ஏ.வி.சாரதி முன்னணியினர் பங்கேற்பு!

ஆர்க்காடு, செப். 12-

இராணிப்பேட்டை மாவட்டம் ஆர்க்காடு நகர கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் சூரியன் பி. ரவி - ரேவதி ஆகியோரின் புதல்வி ஆர்.விஜய கீர்த்தனாவுக்கும் காட்பாடி கன்னிகாபுரம்ஜி.கோபால்ராஜ் - கே.நிர்மலா ஆகியோரின் புதல்வர் ஜி.சந்தோஷ் குமாருக்கும் 17.9.2023 அன்று காலை 6 மணியளவில் திமிரி விலாரி கூட்ரோடு கே.பி.ஜெ.மகாலில் திருமணம் நடைபெறுகிறது.

இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான ஆர்.காந்தி, வேலூர் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., ஆர்க்காடு ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே. சுந்தரமூர்த்தி, நகரச் செயலாளர் ஏ.வி.சரவணன், மாவட்டப் பொருளாளர் ஏ.வி.சாரதி மற்றும் மாவட்டக் கழக, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள், முன்னணியினர் பங்கேற்று வாழ்த்துகிறார்கள்.

கே.தரணிவேந்தன், கே.வெங்கடேசன், டி.பிரசன்னா நன்றி கூறுகின்றனர்.



கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம், குளச்சல் நகரத்தில் உள்ள 25 வாக்குச்சாவடிகளில் 100 – வாக்காளர்களுக்கு 1 முகவர் என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடி பாகமுகவர் குழு உறுப்பினர்களுக்கான (BLC) ஆய்வு கூட்டம் குளச்சல் எஸ்.பி.எம். ஹாலில் நகர செயலாளர் என்.நாகூர்கான் தலைமையில், குளச்சல் நகர்மன்ற தலைவர் நசீர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் – மேயர் ரெ.மகேஷ் கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு ஆலோசனைகள் வழங்கி சிறப்புரையாற்றினார்.

திருவண்ணாமலையில்

# பேரறிஞர் அண்ணா 115வது பிறந்தநாள் விழா ஊர்வலம்!

## பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெறுகிறது!

திருவண்ணாமலை, செப். 12

திருவண்ணாமலையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் விழா ஊர்வலம் நடைபெறவுள்ளது. பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ. வேலு கலந்துகொண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.

காஞ்சி தந்த காவியத் தலைவர் உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருக்கும் செந்தமிழ் அறிஞர் தமிழ் மொழி உணர்வுக்காகவும், தமிழர்களின் மேம்பாட்டுக்காகவும், தமிழ் நாட்டின் சிறப்புக்காகவும் வாழ்நாள் எல்லாம் ஓயாது பாடுபட்ட உத்தமர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை அரசியல் உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த ஆற்றலாளர், "இப்படைத் தோற்கின் எப்படை வெல்லும்" என்று தம்பியர் பெரும்படையைக் கண்டு, நெஞ்சுயர்த்தி பெருமிதம் கொண்ட பெருமகன் மெட்ராஸ் ஸ்டேட் என்ற பெயரை தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்து தமிழ்தாய்க்கு சிறப்பு செய்த தனிப்பெரும் தனயன் சுயமரியாதை சுடரொளி சொக்க வைக்கும் சொற்பொழிவாளர் எழுத்துவேந்தர், இந்திய தேசத்தின் மிகப்பெரும் அரசியல் தலைவர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் 115வது பிறந்தநாள் ஊர்வலம் 15.09.2023 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் திருவண்ணாமலை, கடலைக்கடை சந்திப்பில் இருந்து மாவட்ட தி.மு.க. சார்பில் நடைபெறவுள்ளது.

பிறந்தநாள் விழா ஊர்வலத்திற்கு பொதுப்பணித் துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினருமான எ.வ.வேலு தலைமை வகிக்கிறார்.

சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட அவைத்தலைவர் த.வேணுகோபால், கழக மருத்துவர் அணி துணை தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.என்.அண்ணாதுரை எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட துணை செயலாளர் மு.பெ.கிரி எம்.எல்.ஏ, தலைமைச் செயற்குழு உறுப்பினர் பெ.சு.தி.சரவணன் எம்.எல்.ஏ, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா விஜயரங்கன், விஜியலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச பேரவை செயலாளர் க. சௌந்தரராஜன், மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் பார்வதிசீனுவாசன், ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி. ஆறுமுகம், சி.சுந்தர பாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ. ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ். சிவசேமன், க.சுப்பிரமணி, இரா. ராஜேந்திரன், ஆர்.வி. சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த.செந்தில்குமார், அ.ஏழுமலை, த.மனோகரன், பேரூர் செயலாளர்கள் சி. கே.அன்பு, ப.முருகையன், எம்.சீனுவாசன், மு.அன்பழகன்,

நகரமன்ற தலைவர் நிர்மலாவேல்மாறன், ஒன்றியக்குழு தலைவர்கள் கலைவாணி கலைமணி, பரிமளா கலையரசு, பூ.அய்யாகண்ணு, தமயந்தி ஏழுமலை, அன்பரசி ராஜசேகர், சாந்திபெருமாள், நகரமன்ற துணைத்தலைவர் சு.ராஜாங்கம் மற்றும் கழக முன்னோடிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தவுள்ளார்கள். பிறந்தநாள் விழா ஏற்பாட்டினை நகர கழக செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் செய்து வருகிறார்.

அது சமயம், மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர், கிளைக்கழக நிர்வாகிகள், அணிசார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் உடன்பிறப்புகள் பெருந்திரளாக கலந்துகொள்ளவுள்ளார்கள்.

இந்தியாவில் அசைவத்தைக் காட்டிலும்

# சைவ உணவுக்கான செலவு அதிகரிப்பு!

புதுடெல்லி, செப். 12-

இந்தியாவில் அசைவ உணவு விலையைக் காட்டிலும், சைவ உணவுக்கான செலவு அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

'கிரிசில் மார்க்கெட் இன்டலிஜென்ஸ் மற்றும் அனலிட்டிக்ஸ்' நிறுவனத்தின் மாத இதழான 'ரோட்டி ரைஸ் ரேட்' (Roti Rice Rate) அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

சைவ சாப்பாடு விலையில் 24 சதவிகிதம் அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 37 ரூபாயாக இருந்த தக்காளி விலை 102 ரூபாயாக அதிகரித்தது, சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு ஆகியவையே சைவ உணவு விலை அதிகரிக்கக் காரணமாக இருந்துள்ளது. குறிப்பாக வீட்டு உபயோக சிலிண்டர்கள் விலை குறையாததால் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஹோட்டல் உரிமையாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். சைவ உணவுக்கான செலவின அதிகரிப்பில், 21 சதவிகிதம் அளவிற்கு தக்காளியின் விலை உயர்வு மட்டுமே காரணமாக அமைந்துள்ளது;

வருடாந்திர அடிப்படையில் தக்காளி விலை 176 சதவிகிதம் உயர்ந்துள்ளது; வெங்காயத்தின் விலை 8 சதவிகிதம், மிளகாய் விலை 20 சதவிகிதம் மற்றும் சீரகம் விலை 158 சதவிகிதம் என செலவு அதிகரித்துள்ளது" என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், சைவ உணவுக்கான செலவானது, அசைவ உணவுக்கான செலவைக் காட்டிலும் அதிகமாக இருந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. அசைவ உணவுக்கான செலவினத்தில் 50 சதவிகிதத்தை கோழி இறைச்சி பெறுகிறது. ஆனால், பிராய்லர் கோழியின் விலை குறைந்துள்ளதால், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 3 சதவிகிதம்தான் விலை அதிகரித்துள்ளது.

## 'வாட்ஸ் அப்' பில் வந்த செய்தி!




அடிச்சாறய்யா ஒரே பாலிலே சிக்ஸர்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2023) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ப.ரவி இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்கள் டி.ராஜராஜன் – டாக்டர் அ.வைஷ்ணவி ஆகியோரை மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி வாழ்த்தினார். திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



நெய்வேலியில், கழக சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன் புதல்வர் சபா.இரா.சுமந்த் சா.தனரஞ்சனி ஆகியோரின் சுயமரியாதை திருமணத்தை நேற்று முன்தினம் (10.9.2023) கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, சி.வெ.கணேசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி, புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

### ஹிட்லர் போன்று சர்வாதிகாரியாக செயல்பட்டால்

# இந்தியா சுக்குநூறாகிவிடும்!

## ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எச்சரிக்கை!



சென்னை, செப். 12-

ஹிட்லர் போன்று சர்வாதிகாரியாக செயல்பட்டால் இந்தியா சுக்குநூறாக நொறுங்கிவிடும் என்று கலைஞர் நூற்றாண்டு விழாவில் வைகோ பேசினார்.

கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திரு.வி.க. நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் ஓட்டேரி ஐந்து விளக்கு பகுதியில், தெற்கு பகுதிச் செயலாளர் சாமிக்கண்ணு தலைமையில் 'தமிழன் உயர குரல் கொடுத்தவர், தாய்போல் கலைஞர் அரவணைத்தவர்' என்னும் பெயரில் நடந்த பொதுக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, திராவிட இயக்க தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் சுப.வீரபாண்டியன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர்.

இதில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர் பாபு, மேயர் பிரியா, கலாநிதி வீராசாமி எம்.பி., துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி எம்.எல்.ஏ. உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் வைகோ பேசியதாவது:

வடஇந்திய பகுதிகளில் ஆட்சி செய்தவர்கள் ஒருபோதும் தமிழ்நாட்டில் கால் வைத்ததில்லை, ஆனால் தமிழ்நாட்டு அரசர்கள் கங்கை வரை சென்று ஆட்சி செய்துள்ளனர். மலேசியா, தாய்லாந்து ஆகிய வெளிநாடுகளை கைப்பற்றி ஆட்சி செய்தவர்கள் சேர, சோழ, பாண்டியர்கள். பாரதம் என சனாதனத்தை நிலை நிறுத்தினால், இந்தியா துண்டு துண்டாகப் போய்விடும் என்பதை தற்போதுள்ள ஆட்சியாளர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்தியா என்பது ஒரு நாடல்ல, அது மாநிலங்களால் இணைத்த ஒன்றியம். மாமன்னன் அசோகன் காலத்திலும் இந்தியா ஒன்றாக இல்லை. சக்கரவர்த்தி அக்பர் காலத்திலும் இந்தியா ஒன்றாக இல்லை. பிரிட்டிஷ் காலத்தில் பலதரப்பட்ட நிகழ்வுக்குப் பிறகு இந்தியாவை ஒன்றியமாக உருவாக்கினார்கள். இன்று பாரத் என்று சொல்ல ஆரம்பித்து ஹிட்லர், முசோலினி போன்று சர்வாதிகாரிகளாக இவர்கள் செயல்பட்டால் இந்தியா சுக்குநூறாக நொறுங்கிவிடும்.

இவ்வாறு வைகோ பேசினார்.

## பொத்தனூர் அ.தி.மு.க., பா.ஜ.க. நிர்வாகிகள் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல் செப். 12

நாமக்கல் மேற்கு மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் பொத்தனூர் பேரூர் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவை சேர்ந்த நிர்வாகிகள் பொத்தனூர் பேரூர் திமுக செயலாளர் கருணாநிதி ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கபிலர்மலை அ.தி.மு.க. ஒன்றிய மாணவரணி இணைச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் பொத்தனூர் இளைஞர் பாசறை மற்றும் அம்மா பேரவை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பாஜகவை சேர்ந்த நிர்வாகிகள் பிரகாஷ், ஹரிஷ், சூர்யா, பாண்டி, கிஷோர், ராஜாராம், உசேன், சங்கர் கார்த்தி, தினேஷ், திருநாவுக்கரசு, பாண்டி, ராஜகணபதி, சவுந்தர்ராஜன், துரை ராஜ், மணிகண்டன், மோகன்ராஜ், குமார், வேல் முருகன் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

### மதத்தின் பெயரால்

# பகைமையை ஒன்றிய அரசே தூண்டி விடுகிறது!

## ப .சிதம்பரம் எம்.பி. குற்றச்சாட்டு!



சிவகங்கை. செப். 12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் முன்னாள் ஒன்றிய நிதியமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி.செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

நடந்து முடிந்த பல்வேறு மாநில இடைத்தேர்தலில் இந்தியா கூட்டணி நான்கு இடங்களில் அமோக வெற்றி பெற்றுள்ளது. இது வருகிற 2024ல் நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் இந்தியா கூட்டணி பெறப்போகும் வெற்றிக்கு அச்சாரம் ஆகும்.

பா.ஜ.க .இந்தியா என்ற பெயரை விட்டு பாரத் என்று கொண்டு வருவதாக கூறப்படுகிறது. இந்தியா பாரத் இரண்டும் ஒன்றுதான். எனவே இந்தியா என்பதை மறைக்க முடியாது.

ஒரே நாடு ஒரே தேர்தல் என்ற முழக்கம் எழுப்பப்படுகிறது. அதை அவர்கள் எளிதாக கொண்டுவர முடியாது.

நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டு வந்து அனைத்து மாநிலங்கள் நிறைவேற்ற வேண்டும். எனவே அது ஒன்றும் எளிதான காரியம் இல்லை. மக்களை திசைதிருப்புவதற்காக இத்தகைய செயல்களில் பா.ஜ.க. ஈடுபடுகிறது.

ஜி 20 மாநாட்டிற்கு எதிர்க்கட்சித் தலைவர் கார்கேவிற்கு அழைப்பு தரப்படவில்லை. இது எதிர்க்கட்சிகளை பா.ஜ.க. நடத்தும் தவறான செயல்ஆகும்.

முன்னாள் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி எம்.பி. நடத்திய இந்திய ஒற்றுமை பயணம் நாட்டில் பல்வேறு பெரிய தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளது. இது ஒரு இமாலய சாதனையாகும். இந்திய மக்களை குமரியில் இருந்து காஷ்மீர் வரை இதன் மூலம் இணைத்துள்ளார். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் ஒற்றுமையை வலியுறுத்தி நடைபெற்ற பேரணியாகும். இதனால் இந்து முஸ்லிம் கிறிஸ்தவர்கள் மற்ற. சமூகத்தினர் ஒற்றுமையுடன் வாழ வேண்டும். பா.ஜ.க. வெறுப்புணர்வையும், பகைமையையும் வளர்த்து வருகிறது . இதை மக்கள் நன்றாக புரிந்து கொண்டுள்ளார்கள்.

பணபலம், அதிகார பலம், மூலமாக ஆட்சியை பிடித்து விடலாம் என்று பா.ஜ.க. நினைக்கிறது. அது முடியாது. அதை நாம் ஒற்றுமையுடன் இந்தியா கூட்டணி ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும். கடைசி சொட்டு ரத்தம் இருக்கும் வரை ஒரே மூச்சாக ஒற்றுமையுடன் பாடுபடுவோம்.

இவ்வாறு ப.சிதம்பரம் எம்.பி. கூறினார்.

காரைக்குடி, சிவகங்கையில் ராகுல்காந்தி நடத்திய இந்திய ஒற்றுமை பேரணியின் ஓராண்டு நிறைவினை முன்னிட்டு பேரணி மாவட்ட காங்கிரஸ் தலைவர் சஞ்சய்காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் ப.சிதம்பரம் எம்.பி. கார்த்தி, ப.சிதம்பரம் எம்.பி., எஸ். மாங்குடி எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. வி.ராஜசேகரன், மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.ராஜரத்தினம், சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் தி.விஜயகுமார் வீரகாளை மாநில மகளிர் காங்கிரஸ் துணைத் தலைவர் வித்யாகணபதி உட்பட நிர்வாகி கள் பலர் கலந்து கொண்டார்கள்.




# சனாதனமும், பாரதமும்: ஆரிய மாயையின் வரலாற்று வடிவங்கள்!

## ‘மின்னம்பலம்’ இணையதளத்தில் பேராசிரியர் ராஜன் குறை கிருஷ்ணன் சிறப்புக் கட்டுரை!

அண்ணா தன் நூலுக்கு ஆரிய மாயை என்று பெயர் சூட்டக் காரணம் ஆரியம் பிறரை மயக்கி தன்னை ஏற்கச் செய்யும் தன்மை கொண்டது என்பதைக் குறிக்கத்தான். ஆரியம் என்று ஒன்றுமில்லை; அப்படி இருப்பது போல மாயத்தோற்றம் மட்டும்தான் இருக்கிறது என்ற பொருளில் அவர் அந்த பெயரைச் சூட்டவில்லை. ஆரியம் என்று ஒன்று இருக்கிறது. அது பிறருக்கு நன்மை தருவது போல தோற்றமளித்து அவர்களையும் தன் கருத்தியலை ஏற்கச் செய்கிறது என்பதைக் குறிக்கவே அவர் ஆரிய மாயை என்று பெயர் வைத்தார். நாம் அந்த மாயைக்கு ஆட்படாமல், ஆரியத்தின் உண்மையான தன்மையை அறிய வேண்டும்.






நானும், நண்பர்கள் ரவீந்திரன் ஸ்ரீராமச்சந்திரன், வி.எம்.எஸ். சுபகுணராஜன் ஆகிய மூவரும் சேர்ந்து எழுதியுள்ள “Rule of the Commoner: DMK and the Formations of the Political in Tamil Nadu, 1949-1967” என்ற ஆய்வு நூலில் ஆரிய மாயை என்பதை Aryan Allure என்றுதான் மொழியாக்கம் செய்துள்ளோம். இதற்கு முன்பு செய்தவர்கள் Aryan Illusion என்று மொழியாக்கம் செய்தார்கள். அது தவறான பொருளாகும். ஆங்கிலத்தில் Allure என்றால் கவர்ந்திழுப்பது.

இன்று வரை ஆரியம் அதே வேலையைத்தான் செய்கிறது. இரண்டு வார்த்தைகளை வைத்துக் கொண்டு பெரும் மாய்மாலங்களை செய்கிறார்கள். ஒன்று சனாதனம். மற்றொன்று பாரதம். இரண்டுமே ஆரியர்கள் உருவாக்கிய சமஸ்கிருத மொழிச் சொற்கள். மற்ற மொழிகளிலும், தமிழிலும் புழங்குகின்றன என்றாலும். இந்த இரண்டு சொற்களை எவ்வாறு புரிந்துகொள்வது, அவை குறித்த சர்ச்சை என்ன, ஆரிய மாயை எப்படி செயல்படுகிறது என்பதை விரிவாகப் பார்ப்போம்.




**சனாதனம்**

**தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் ஒருங்கிணைத்த சனாதன ஒழிப்பு மாநாட்டில் பேசிய தி.மு.க இளைஞரணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சனாதனம் என்பதை டெங்கு, காலரா, கொரோனா கிருமிகளை அழிப்பது போல அழிக்க வேண்டும் என்று அற்புதமாக அறை கூவினார். திடீரென்று வானமே இடிந்து விழுந்தது போல அமித் ஷா முதல், உள்ளூர் அம்பிகள் வரை கொந்தளிக்கிறார்கள். நூற்றைம்பது ஆண்டுகளாக தமிழ்நாட்டில் சனாதன எதிர்ப்பு நிலவி வருகிறதே, இப்போது என்ன புதுப் பிரச்சினை என்று பார்த்தால் ஆரியத்தின் தகிடுதத்தங்களை அம்பலப் படுத்தலாம்.**

**சனாதனம் என்பது காலத்தால் அழியாத உயர் நெறி. மனிதர்கள் மகிழ்ச்சியாக, அமைதியாக இணைந்து வாழ உதவும் ஒழுக்க நெறி. அதைப் போய் அழிக்கலாமா என்று தமிழ் தொலைக்காட்சிகளில் ஆரிய முகவர்கள் கேட்கிறார்கள். வட நாட்டில் சனாதன தர்மம் என்பதுதான் இந்து மதத்தின் பெயர்; சனாதனத்தை அழிப்பது என்றால், இந்து மதத்தை அழிப்பது என்று பொருள் என்று மாய்மாலம் செய்கிறார்கள். இதில் ஏற்படும் குழப்பங்கள் கொஞ்ச, நஞ்சமல்ல.**




**தமிழ்நாட்டில் சனாதனம் என்பதன் பொருள் காலத்திற்குப் பொருந்தாத பத்தாம்பசலித்தனம். ஆங்கிலத்தில் Orthodoxy என்பார்கள். அதாவது மூடப் பழக்கங்களை விடாமல் கடைப்பிடிப்பது. மாற்றங்களை ஏற்க மறுப்பது. எல்லா காலங்களிலும் எல்லா மதங்களிலும், சமூகங்களிலும் மாற்றங்களை ஏற்பவர்கள் இருப்பார்கள். மாற்றங்களை ஏற்க மறுத்து பழைய பழக்க, வழக்கங்களையே பின்பற்ற வேண்டும் என்பவர்கள் இருப்பார்கள். இரண்டாவது வகையினர்தான் சனாதனி. அதனால்தான் ஜாதீயத்தை இன்றும் கடைப்பிடிப்பவர்களை சனாதனி என்கிறோம்.**

**எதில் எது சரி? சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொது நெறியா? சனாதனம் என்றால் இந்து மதமா? சனாதனம் என்றால் வர்ணாஸ்ரமம், ஜாதீயம் உள்ளிட்ட மூடப்பழக்க, வழக்கங்களா?**

**சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொதுநெறியா?**

தமிழ்நாட்டு தொலைக்காட்சிகளில் பேசும் பல தினுசான சங்கிகள், பார்ப்பனர்கள் இவ்வாறு சனாதனம் என்றால் அழியாத மானுடப் பொதுநெறி என்று பேசுகிறார்கள். சரி, அப்படி எந்த நூலில் கூறியுள்ளது, அதற்கான ஆதாரங்களைக் கூறுங்கள், அந்த நெறிகளுக்கான பட்டியலைக் கூறுங்கள் என்றால் ஏதேதோ பேசுகிறார்களே தவிர, இந்த நூலில் இந்த இடத்தில் இவைதான் நெறிகள், அவற்றின் பெயர்தான் சனாதன தர்மம் என்று சான்றாதாரம் காட்ட மாட்டேன் என்கிறார்கள்.

அதற்கு மாறாக சனாதன தர்மம் என்றால் என்ன என்று புரிந்து கொள்ள உதவியாக அறிஞர் பொ.வேல்சாமி முகநூலில் பகிர்ந்திருந்த 1907ஆம் ஆண்டு வெளியான நூலைப் பார்க்கலாம். இந்த நூலை பலரும் தொலைக்காட்சி விவாதங்களில் மேற்கோள் காட்டுகிறார்கள். இந்த நூலானது “காசிப்பிரதான ஹிந்து வித்யாசாலையின் சம்ரஷணை கமிட்டியார் தம் ஆட்சிக்குட்பட்ட சகல வித்யா சாலைகளிலும் சிறுவர்க்கு மதம், நீதி இவ்விஷயங்கள் கற்பிக்கப்படுவதற்கு” உருவாக்கியது. மூலம் எந்த மொழியில் இருந்தது என்று தெரியாவிட்டாலும், தமிழில் மொழியாக்கம் செய்து 1907ஆம் ஆண்டு “ஸனாதன தர்மம்” என்ற பெயரில் பிராட்வே மினர்வா பிரஸ்ஸில் அச்சடிக்கப்பட்டதான குறிப்புடன் பிரசுரிக்கப்பட்டுள்ளது.



**ராஜன் குறை கிருஷ்ணன்**
*பேராசிரியர்*
*அம்பேத்கர் பல்கலைக் கழகம், புதுடெல்லி.*

இந்த நூலில் ஏராளமான சுவாரஸ்யமான விஷயங்கள் உள்ளன. இந்த நூலின் ஏழாம் அத்தியாயத்தில் 150ஆவது பக்கத்தில் நான்கு வருணாங்கள் என்பது விளக்கப்பட்டுள்ளது. சனாதன தர்மத்தின் மிக முக்கியமான அம்சமே மக்களை வர்ணாங்களாகப் பிரித்திருப்பதுதான் என்று பெருமையாக நூல் கூறுகிறது. ஆனால், இதில் கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கம் சுவாரஸ்யமானது.

முதலில் நாம் மறுபிறவி கோட்பாட்டை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆன்மா வேறு, சரீரம் என அழைக்கப்படும் உடல் வேறு. இந்த ஆன்மா என்பதுதான் குழந்தைப் பருவத்திலிருந்து ஒவ்வொரு பிறப்பின்போதும் மெல்ல ஒவ்வொரு வர்ணமாக வளர்ந்து வர வேண்டும். முதல் பிறவியில் அது குழந்தையாக இருக்கும் போது சூத்திர வர்ணத்தின் சரீரத்தில் பிறக்கும். அப்போது பிறர் சொற்படி கேட்டு, பிறருக்கு சேவை செய்ய வேண்டும்.

அப்படிச் சரியாக சேவை செய்தால் பிரமோஷன் கிடைத்து வைசிய வர்ணத்தில் பிறக்கும்; அடுத்து சத்திரிய வர்ணம்; எல்லா பிறவிகளிலும் சரியாக நடந்து கொண்டால் ஆன்மா நல்ல முதிர்ச்சியடைந்து பிராமண வர்ணத்தில் பிறக்கும். அதில் சரியாக நடந்துகொண்டால் அது பிரபஞ்ச முதலாளியான ஈஸ்வரனுடன் கலந்து விடும். இல்லாவிட்டால் மீண்டும் பிறப்புதான்.

இந்த நூல் என்ன கவலைப்படுகிறது என்றால் சமகாலத்தில் ஒரு குறிப்பிட்ட நிலையில் (ஸ்திதியில்) உள்ள ஆன்மா, தவறான சரீரத்தில் பிறந்துவிடு கிறது என்ற நிலையைத் தான். ஆரம்ப நிலையில் உள்ள ஆன்மா பிராமண உடலில் பிறந்து ஒழுங்காகச் செயல்படாமல் குழம்புகிறது. முதிர்ந்த நிலையில் உள்ள ஆன்மா சூத்திரர் உடலில் பிறந்தால், பேசாமல் சேவை செய்யாமல் கலகம் செய்கிறது. இந்த ஆன்மாஉடல் தவறாக இணைந்துவிடுவதில் நிறைய குழப்பம் நிகழ்கிறது என்று இந்த நூல் கூறுகிறது.

இதுதான் சனாதன தர்மத்தின் அடிப்படையா என்று கேட்டால் தமிழ் தொலைக்காட்சி பார்ப்பனர்கள், இல்லை இந்த நூல் இல்லை என்கிறார்கள். காஞ்சி சங்கராச்சாரியார் கூறியதை மேற்கோள் காட்டினால் அதுவும் இல்லை என்கிறார்கள். ஆனால் காலத்தால் அழியாத தர்மம் என்று கிளிப்பிள்ளைகள் போல சொல்கிறார்கள்.

சரி, ஊரிலுள்ள சாமியார்கள், சங்கராச்சாரியார்கள், ஜீயர்கள் எல்லோரையும் கூட்டி இதுதான் 2023ஆம் ஆண்டுக்கான சனாதன தர்மம் என்று தெளிவாக ஒரு நூலை எழுதுங்கள் என்றால் அதையும் செய்வதில்லை. கேட்டால் எங்கள் ஹிந்து மதத்தில் எத்தனையோ பிரிவுகள், சிந்தனைகள் என்பார்கள். வெட்டிப்பேச்சு மாய்மாலத்தைத் தவிர ஆய்வு மனப்பான்மையோ, அறிவு நேர்மையோ இல்லாமல் தமிழ்நாட்டில் ஆரிய மாயை வேலை பார்க்கிறார்கள்.

**சனாதனம் என்றால் இந்து மதமா?**

இங்கேதான் பெரிய பிரச்சினை. காசி வித்தியாசாலை நூல் தெளிவாக சனாதன மதம், ஆரிய மதம், ஹிந்து மதம் எல்லாம் ஒன்றுதான் என்று கூறுகிறது. அதாவது பார்ப்பனர்களின் மதம். இங்கே பிரச்சினை என்னவென்றால் இந்தியா முழுவதும் கும்பிடப்படும் சாமிகள் எல்லாவற்றிலும் பார்ப்பனர்கள் அவர்கள் லேபிளை ஒட்டி விட்டார்கள். எல்லா தரிசனங்களும் இந்து என்கிறார்கள். உதாரணங்களைப் பார்ப்போம்.

தமிழ் சைவ சித்தாந்தம் ஒரு தனித்துவமான தரிசனம். இதைப் பயின்ற சான்றோர்கள் வேத அதாவது வைதீக மரபை ஏற்பதில்லை. சோமசுந்தர பாரதியார் அவர் திருமணத்தில் பார்ப்பன புரோகிதர்களையோ, சடங்குகளையோ அனுமதிக்கவில்லை. தமிழ் சைவ தரிசனத்தில் நால்வர்ண கோட்பாட்டை குறித்த விளக்கங்களோ, விதிகளோ இல்லை. அதனால் வடலூர் ராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்கம் என்ற தரிசனத்தையும், அருட்பா என்ற பாடல் தொகுப்பையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் வழங்கினார்.

ஆனால், இப்போது இவையெல்லாமே இந்து மதம் என்கிறார்கள். ஆளுநர் ரவி சனாதனத்தை எதிர்த்த வள்ளலாரே சனாதனத்தின் உச்சம் என்று கூச்சமில்லாமல் பொய் பேசுகிறார். சத்தியவேல் முருகனார் போன்ற சைவப் பெரியோர்கள் தமிழ் சைவம், இந்து மதம் அல்ல என்று கூறினாலும் அதை ஏற்றுக்கொள்வதில்லை.

இந்தியாவில் உள்ள எத்தனையோ தரிசனங்கள், வழிபாட்டு முறைகள், தெய்வங்கள் ஆரியர்களின் வேதகால மூலங்களுக்குத் தொடர்பில்லாதவை. ஆனால், அனைத்தையும் தங்கள் செல்வாக்குக்குள் அடக்க விரும்பும் பார்ப்பனர்கள் எல்லாவற்றிலும் தங்கள் சனாதன லேபிளை ஒட்டி, எல்லாம் இந்து மதம் என்று சாதிக்கிறார்கள்.

**சனாதனம் என்பது மூடப் பழக்கங்களா?**

**பார்ப்பனரானாலும் வைணவர்களிடையே ஜாதி வேற்றுமை பார்ப்பதை கடுமையாக எதிர்த்தார் பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ராமானுஜர். பார்ப்பனரல்லாதவரானாலும் தன் குருவாக நினைத்த திருக்கச்சி நம்பிகளை அவர் மனைவி அவமரியாதை செய்ததால், மனைவியைப் பிரிந்தார். அவருடன் முரண்பட்ட பார்ப்பனர்கள்தான் சனாதனிகள். ராமானுஜர் மாற்றத்தை, சமத்துவத்தை சிந்தித்தார்.**

**விதவை மறுமணத்தை ஏற்க மறுத்தவர்களை சனாதனிகள் என்று அழைத்தார்கள். குழந்தை திருமணத்தை தடை செய்வதை எதிர்த்தவர்கள், தேவதாசிகள் தடை சட்டத்தை எதிர்த்தவர்கள், ஆலய நுழைவை எதிர்த்தவர்கள் எல்லோரையும் சனாதனிகள் என்று அழைத்தார்கள்.**

**எனவே சனாதனம் என்பது மாற்றத்தை மறுக்கும் பிற்போக்கு கொள்கைகள், வர்ணாதர்மம் என்றே பொருள்படும்.**


**பாரதம் என்ற வார்த்தையின் மூலாதாரம் என்ன?**

இந்தியிலும், வேறு பல மொழிகளிலும் பாரத் என்றுதான் ஏற்கனவே குறிப்பிட்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில்தான் இந்தியா என்ற சொல் புழங்குகிறது. தமிழிலும், வேறு சில மொழிகளிலும் இந்தியா என்று புழங்குகிறார்கள். இப்போது பிரச்சினையே ஆங்கிலத்திலும் இந்தியாவை தவிர்த்து பாரத் என்று கூற வேண்டுமா என்பதுதான்.

இந்தியாவிற்குள் நிலத்தில் பயணம் செய்து வந்தவர்கள் அனைவரும் இமய மலைத்தொடரில் இருந்த கைபர், போலன் கணவாய் வழியாகத்தான் வந்தார்கள். அவ்விதம் வந்தவர்கள் முதலில் எதிர்கொண்டது சிந்து நதி தீரம். சிந்து என்பதை கிரேக்கர்கள் இன்டஸ் என்று அழைத்தார்கள். உதாரணமாக கி.மு. நான்காம் நூற்றாண்டில் மெகஸ்தனிஸ் இண்டிகா என்ற நூலை எழுதினார். இதைத் தொடர்ந்த திரிபுதான் இந்தியா. கொலம்பஸ் அமெரிக்காவுக்கு அருகிலுள்ள தீவுகளை அடைந்தபோது அதை இந்தியா என்று நினைத்ததால் இன்றளவும் அது வெஸ்ட் இண்டீஸ், மேற்கு இந்தியா என்று அழைக்கப்படுகிறது. கிரிக்கெட் ரசிகர்களுக்குத் தெரியும்.

பாரசீகர்களும், அரேபியர்களும் சிந்து என்பதை ஹிந்த் என்று எழுதினார்கள். அதனால் அந்த நதியை ஒட்டிய பகுதியை ஹிந்துஸ்தான் என்றார்கள். எனவே இந்துஸ்தான் என்ற பெயரும் சிந்து நதியை ஒட்டியதுதான். ஆனால் இதே பெயரில் ஹிந்து மதம், ஹிந்தி மொழி என்றெல்லாமும் பெயரிட்டுவிட்டதால் ஹிந்துஸ்தானம் என்பதைவிட இந்தியா என்ற பெயர் சற்றே பொதுத்தன்மையுடன் உள்ளதாலோ என்னவோ இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் நிலைத்துவிட்டது.

இப்போது பாரதீய ஜனதா கட்சி நமக்கு நாமே வைத்துக்கொண்ட பெயர் பாரதம் என்கிறது. பார்ப்பனர்கள் சொல்லும் மந்திரங்களில் “ஜம்புத்வீபே, பரத கண்டே” என்று சொல்லுவதாகத் தெரிகிறது. தமிழ்த் தாய் வாழ்த்திலும் “சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்” என்று வருகிறது. இதெல்லாம் கண்டம் என்ற நிலப்பரப்பை சுட்டுகின்றன. தேசம் என்பதையல்ல. பின்னால் இருபதாம் நூற்றாண்டில் பாரதியார் தமிழில் பாரத தேசம் என்பதை பிரபலப்படுத்தி




னார். வங்காளத்திலும், இந்தியிலும் “பாரத் மாதா” என்ற வழக்கு நிலைப்பட்டது.

**இதெல்லாம் சரிதான். இந்தியா சிந்து நதியிலிருந்து வந்தது. பாரதம் எதிலிருந்து வந்தது என்று கேட்டால்தான் ஆரியம் பல்லிளிக்கிறது. ஜட பரதன் என்ற முனிவர் என்கிறது. பரதன் என்ற மன்னன் என்கிறது. இவர்களுக்கெல்லாம் எந்த சரித்திர ஆதாரமும் இல்லை. எல்லாம் புராணக் கற்பனையில் உருவானவை.**

மகாபாரதம் என்று ஒரு இதிகாசத்திற்கு பெயர் இருக்கிறது. இதற்கு ஏன் பாரதம் என்று பெயர் என்றால் அதிலும் திட்டவட்டமாக ஒரு தெளிவில்லை. குரு வம்சத்தின் முக்கியமான மன்னன், முதல் மன்னன் பரதன் என்றெல்லாம் கூறுகிறார்கள்.

**இந்தியாவில் ஆரியர்களுக்கு முன்பே பல்வேறு பண்பாடுகள் நிலவின என்பதில் ஆய்வாளர்கள் யாருக்கும் எந்த ஐயமும் கிடையாது. ஆரிய பண்பாடு மட்டுமே இந்தியாவின் முக்கிய பண்பாடு என்று யாரும் வாதிட முடியாது. திராவிட பண்பாடும் சரி, பல்வேறு பூர்வகுடிகளின் பண்பாட்டு மூலகங்களும் சரி புறக்கணிக்கத்தக்கவை அல்ல. இந்த பண்பாடுகள் பலவும் ஆரியர்களுடன் முரண் உறவைக் கொண்டவை.**

**இந்த நிலையில் அனைவரும் ஏற்றுக்கொண்ட புவியியல் அடிப்படை கொண்ட இந்தியா என்ற பெயரே ஆங்கிலத்தில் புழங்குவதுதானே சரியாக இருக்கும்? இந்தியில் ஏற்கனவே பாரத் என்ற பெயரைத்தான் ரூபாய் நோட்டிலும், பாஸ்போர்ட்டிலும் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலத்தில் இந்தியா. இதை இப்போது மாற்றுவது நாட்டை ஆரியமயமாக்கத்தானே? என்று மடியும் இந்த ஆரிய மாயை?**

நன்றி :
‘மின்னம்பலம்’
இணையதளம்



ராணிப்பேட்டையில் நடந்த தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளரும் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான ஆர்.காந்தி பேசினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன் கே.சுந்தரம், அ.அசோகன் எம்.எஸ். கலைமணி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் நேற்று (11.09.2023) திருக்கோயில் சார்பில் 8 இணைகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசைகளை வழங்கி, திருமணத்தம்பதிகளுடன் குழு புகைப்படம் எடுத்துக்கொண்டார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் எஸ்.ராஜப்பா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி பாரதி, உதவி ஆணையாளர் சுரேஷ் உட்பட பலர் உள்ளனர்.

### இந்து அறநிலையத்துறை சார்பில்

# 8 ஜோடிகளுக்கு திருமணம்! ரூ.4.37 இலட்சத்தில் சீர்வரிசைகள்!

## அமைச்சர் ஐ.பெரியசாமி நடத்தி வைத்து வழங்கினார்!

திண்டுக்கல், செப்.12-

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி இந்து அறநிலையத்துறை சார்பில் திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 8 ஜோடிகளுக்கு திருமணங்களை நடத்தி வைத்து ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசைகளை வழங்கினார். திருமணத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் பூங்கொடி தலைமை வகித்தார்.

ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பொருளாதாரத்தில் பின் தங்கிய ஏழை, எளிய பொது மக்களின் இணைகளுக்கு திருக்கோயில்கள் சார்பாக 4 கிராம் தங்கத்தாலி உட்பட ரூ.50,000 மதிப்பில் சீர்வரிசைகள் வழங்கி திருமண விழா நடத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டு 500 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தப்பட்டது. தற்போது கூடுதலாக மேலும் 100 இணைகளைச் சேர்த்து ஒரு மண்டலத்திற்கு 30 இணைகள் வீதம் 600 இணைகளுக்குத் திருக்கோயில்கள் சார்பாக திருமண விழா நடத்தப்படுகிறது.

அதன்படி, இந்துக்களின் திருமணத்திற்கு தேவையான 4 கிராமில் திருமாங்கல்யம், மணமகன் ஆடை ரூ.1000, மணமகள் ஆடை ரூ.2000, திருமணத்திற்கு மணமகன், மணமகள் வீட்டார் 20 நபர்களுக்கு உணவு ரூ.2000, மாலை, புஷ்பம் ரூ.1000, பீரோ ரூ.7800, கட்டில் ரூ.7500, மெத்தை ரூ.2200, இரண்டு தலையணை ரூ.190, ஒரு பாய் ரூ.180, இரண்டு கைக்கடிகாரம் ரூ.1000, ஒரு மிக்சி ரூ.1490, பூஜை பொருட்கள் மற்றும் பாத்திரங்கள் ரூ.3640 என மொத்தம் ரூ.30,000 மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் மற்றும் 4 கிராம் தங்கம் ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

நடப்பு ஆண்டில் முதற்கட்டமாக திண்டுக்கல் இணை ஆணையர் மண்டலத்திற்குட்பட்ட திண்டுக்கல் மாவட்டத்தில் 2 இணைகளுக்கும், தேனி மாவட்டத்தில் 5 இணைகளுக்கும் என மொத்தம் 7 இணைகளுக்கு இலவச திருமணம் நடத்தி வைக்கப்பட்டது.

தற்போது இரண்டாம் கட்டமாக திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் 8 இணைகளுக்கு இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் திருமணம் நடத்தி வைக்கப் பட்டுள்ளது. அதன்படி, நடப்பு ஆண்டில் இதுவரை திண்டுக்கல் இணை ஆணையர் மண்டலத்தில் மொத்தம் 22 இணைகளுக்கு திருக்கோயில்களின் சார்பில் இலவச திருமணம் நடத்தப்பட்டுள்ளது. திண்டுக்கல் காளகத்தீஸ்வரர் திருக்கோயிலில் இன்று நடைபெற்றுள்ள இலவச திருமண விழாவில் 8 இணைகளுக்கு திருமணம் நடத்தப்பட்டு சுமார் ரூ.4.37 இலட்சம் மதிப்பிலான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவற்றை கடைக்கோடி மக்களையும் சென்றடையும் வகையில் செயல்படுத்தி வருகிறார், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர்.ராஜப்பா, மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சுப்பிரணியம், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை இணை ஆணையர் பாரதி, உதவி ஆணையாளர் சுரேஷ், செயல் அலுவலர்கள் வேலுச்சாமி, முருகன், பாலசரவணன், இராமநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

30 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.09.2023



க.வீரைய்யா Ex,MP.

தந்தை பெரியாரிடம் பயின்று
அண்ணாவின் லட்சிய தீபத்தை தாங்கி பிடித்து
கலைஞரோடு ஒன்றாக பயணித்து
தளபதியின் உழைப்புக்கு உயர்வு தந்து
கழக வழியில் தடம் பிறழாமல்
எங்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கே
காலமெல்லாம் உங்கள் நெறியில்....

தலைவர் தளபதியின்
தலைமையில்
என்றைக்கும் இயக்கம் காப்போம் உங்கள் வழியில்...

மு.க.இராமகிருஷ்ணன்
ஒன்றிய கழகச் செயலாளர்,மாவட்ட கவுன்சிலர்

Dr.மு.க.முத்துக்கருப்பன் M.B.B.S., DMRD., MDRD.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்

க.வீரைய்யா Ex,MP. குடும்பத்தினர்கள்
புதுக்கோட்டை

### அரியலூர் மாவட்டம்

# கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் மா.மதிவேந்தன் - சா.சி.சிவசங்கர் மேற்கொண்டனர்!

அரியலூர்,செப், 12-

அரியலூர் மாவட்டம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் மேலகருப்பூர் ஊராட்சியில் அரியலூர் வனச்சரக புதிய நாற்றாங்காலினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் புலம்பெயரும் நீர்ப்பறவைகளுக்கான, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான நன்னீர் ஏரிகளுள் ஒன்றாக விளங்குகிறது. மாநிலத்தின் பெரிய ஏரிகளுள் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இச்சிறப்புமிக்க அரியலூர் வனக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கரை வெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் அரியலூர் வனச்சரகம், அரியலூர் வனக்கோட்டத்தில் புதிய நாற்றாங்கால் அமைக்கப்பட்டுள்ளதை இன்றையதினம் வனத்துறை அமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் உள்ள புதை உயிரிப் படிவ அருங்காட்சியகத்தினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம. ச. கலைவாணி, முதன்மை தலைமை வனக்காவலர் சென்னை சுபரத் மொஹபத்ரா தலைமை வனக்காவலர் திருச்சி சதிஷ் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், வனச்சரக அலுவலர் முத்துமணி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேகரன், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ்செல்வன், ஆர்.ஜி.மணிவேல், நெடுஞ்செழியன்,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் மு.பழனிசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் ரவி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, மனோஜ், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாபதி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் டி.எம்.அருண், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆசை.அன்பு, எல். கே.அருண் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.




கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடிய தலைவர் இமானுவேல் சேகரன் அவர்களின் 66வது நினைவு தினத்தை முன்னிட்டு கழக அலுவலகத்தில் வைக்கப்பட்ட அன்னாரது திருஉருவப் படத்திற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணி மாறன் மலர்தூவி மரியாதை செலுத்திய போது எடுத்தபடம். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். ஸ்ரீதர்

செப்டம்பர் 12 (2020)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# மோடிஜி இது என்ன புதுக்குழப்பம்?

இந்திய அரசியல் சட்டம் (Indian Constitution, Article No.1) பிரிவு 1ல் இந்திய ஒன்றியத்தின் பெயரும், எல்கையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் மாநிலங்களை உள்ளடக்கிய பகுதியை "பாரதம்" எனவும், வழக்கில் உள்ள ஒன்றியப் பகுதிகளை "இந்தியா" எனவும் பெயரிடப்பட்டுள்ளது (India that is Bharat shall be Union of States) என்ற விளக்கத்துடன் தொடங்குகிறது. இந்திய அரசியல்சட்டத்தின் இந்த ஒரு பிரிவில்தான் "பாரதம்" என்ற சொல் சொற்றொடர் பயன்படுத்தப்பட்டுள்ளதுதேயல்லாமல், மற்ற 395 அரசியல்சட்டப் பிரிவுகளிலோ, 12 அட்டவணைகளிலோ "பாரதம்" என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. அரசியல்சட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் "இந்தியா" என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா என்ற வார்த்தையை இதுவரையிலும் எல்லாத்துறைகளிலும் பயன்படுத்தி வந்த ஒன்றிய பி.ஜே.பி. அரசு திடீரென "பாரதம்" என்ற சொற்றொடரை மாற்றாகப் பயன்படுத்துவதற்கு என்ன காரணம்? அதுவும், சிறப்பு நாடாளுமன்றக் கூட்டத்தொடர் செப்டம்பர் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை தொடங்கவுள்ளது என்ற நிலையில் "இந்தியா", "பாரதம்" ஆக்கப்படுவதற்கான காரணம் என்ன என்பதே வரி செலுத்தும் குடிமக்களின் (Tax Payer) கேள்வியாகும்.

அதுமட்டுமல்ல, இந்திய அரசியல் சட்டமே மக்களால் உருவாக்கப்பட்டு 1949-ம் ஆண்டு, நவம்பர் திங்கள் 26-ம் நாள் பிரகடனப்படுத்தி, 1950-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ம் நாள் அமல்படுத்தப்பட்டது. எனவே, மக்களால் உருவாக்கப்பட்டு, அமல்படுத்தப்பட்ட அரசியல் சட்டத்தில் இடம்பெற்றதும், இதுவரையில் பயன்பாட்டில் உள்ளதுமான "இந்தியா" என்ற சொற்றொடரை எடுத்துவிட்டு "பாரதம்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதற்கு என்ன அவசிய அவசரம் உருவானது என்பதையும், ஒன்றிய அரசு மக்களுக்கு விளக்கிட வேண்டிய கடமையும், பொறுப்பும் உண்டு என்பதற்கான விளக்கம் தேவையில்லை.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரையிலும் இன்றுள்ள எல்லைகளைக் கொண்ட இந்த நிலப்பரப்பு இந்தியா என்று அழைக்கப்படவில்லை. அதேபோல், "பாரதம்" என்றும் அழைக்கப்படவில்லை. "பாரதம்" என்ற சொற்றொடரே புராணங்களில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையே அல்லாமல், வரலாற்றுப் பதிவுகளில் "பாரதம்" என்ற சொற்றொடர் இடம்பெறவில்லை. புராணங்கள் எல்லாம் வரலாற்றுப்பதிவுகளாக இருக்க முடியாது என்பதை விளக்க வேண்டிய தேவையில்லை. இந்திய அரசியல் சட்டம் உருவாக்கப்படும் பொழுது வரைவுக்குழுத் தலைவராகப் பணியாற்றிய பாபா சாகிப் டாக்டர் அப்பேத்கர் அவர்கள் "பாரதம்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்தவில்லை. பின்னர், அரசியல்சட்ட நிர்ணயக்குழு உறுப்பினர்கள் சிலரின் அழுத்தம் காரணமாகத்தான் "பாரதம்" என்ற சொற்றொடர் இணைக்கப்பட்டது. "சிந்து நதி" என்ற வேர்ச்சொல்லின் திரிபுச்சொல்தான் 'இந்தியா' என்று கூறும் ஆய்வாளர்களும் உண்டு, வேறுபல ஆய்வுகளும் கூட உண்டு.



**பொன்.முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்
கழக உயர்நிலை
செயல் திட்டக்குழு உறுப்பினர்

எது எப்படியிருப்பினும் இந்தியா என்ற சொற்றொடர் ஆங்கிலேயரின் ஆட்சி இங்கு உறுதிப்பட்டவுடன், நிர்வாக ஏற்பாட்டிற்காக அவர்களது ஆதிக்கத்திற்கு உட்பட்டதும், தற்பொழுது பாகிஸ்தான், வங்காள தேசம் உள்ளிட்ட பகுதிகளையும் இணைத்து இந்தியா என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. பின்னர், பாகிஸ்தான் - வங்காளதேசம் பிரிந்த பின்னரும், எஞ்சியுள்ள இன்றைய நிலப்பரப்பு இந்தியா என்றுதான் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, இந்தியா என இன்றுள்ள நிலப்பரப்பை அரசியல்சட்டத்தில் பதிவு செய்துள்ளார்கள். சில அரசியல்சட்ட நிர்ணயசபை உறுப்பினர்களின் அழுத்தம் காரணமாக "பாரதம்" என்ற சொற்றொடரும் சேர்க்கப்பட்டது என்பதை அரசியல்சட்ட நிர்ணய சபை உறுப்பினர்களின் விவாதங்களை ஆழ்ந்து படிப்பவர்களுக்கு மிக நன்றாகவே விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இத்தகைய சூழ்நிலையில் திடீரென G20 மாநாட்டுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்ட அழைப்பிதழ்களில் அழைப்பினை விடுக்கும் குடியரசுத்தலைவரின் பொறுப்பு பாரத குடியரசுத் தலைவர் (President of Bharath) என்று குறிப்பிட்டமைக்கு என்ன காரணம் என்பதை இந்திய ஒன்றிய குடிமக்கள் அறிந்துகொள்ள விரும்புவது இயல்பான உந்துதலாகும். மேலும், சில அனுமானங்களும் மக்கள் மத்தியில் உருவாகியிருக்கின்றன. அதாவது, ஒன்றிய அரசின் சமீபத்திய அறிவிப்பான "ஒரே நாடு - ஒரே தேர்தல்" என்ற அறிவிப்பு, இதனைத் தொடர்ந்து நாடாளுமன்றத்தின் சிறப்புக்கூட்டம் வரும் 18ம் தேதி முதல் 22ம் தேதி வரை நடைபெறும் என்ற அறிவிப்புக்கள் ஆகிய நட வடிக்கைகளின் வெள்ளோட்டமாகத்தான் "பாரதம்" என்ற சொற்றொடர் வழக்கத்திற்கு மாறாக கையாளப்படுகிறது என மக்கள் நம்புவதற்கு வாய்ப்பாக உள்ளது.

"ஒரே நாடு", அதாவது பல மாநிலங்களை உள்ளடக்கிய ஒன்றியம் (Article No.1 (1) India that is Bharat, shall be Union of States...) என்பதில் கருத்து வேறுபாடு உருவாக வாய்ப்பில்லை. ஆனால், ஒரே தேர்தல் என்பது இந்திய அரசியல் சட்டப்படி சாத்தியமாகுமா? ஒருமுறை ஒரே நேரத்தில் தேர்தல் நடத்தலாம், அந்த ஒரே தேர்தலில் அரசியல் கட்சிகள் பெறும் எண்ணிக்கை பலத்தின் அடிப்படையில்தான் மத்தியிலும், மாநிலங்களிலும் ஆட்சிகள் அமையும். அதற்கான வாய்ப்பும் சூழ்நிலைகள் இல்லாமல் போவதற்கும், இடையிலே சீர்குலைந்து போவதற்கும் வாய்ப்புக்கள் உருவாகும் என்பதை கடந்தகால ஒன்றிய - மாநிலங்களின் ஆட்சிகள் உணர்த்தியிருக்கின்றன. எனவே, மாநிலங்கள் ஒன்றிணைந்த ஒரே நாடு சாத்தியம் என்பதில் ஐயமில்லை, ஆனால், ஒரே தேர்தல் என்பது பல்வேறு குழப்பங்களுக்கும், அரசியல்சட்ட சீர்குலைவுகளுக்கும் நிச்சயமாக வழி வகுக்கும்.

அடுத்த 2024ம் ஆண்டு நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இந்தியா முழுமையும், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து கூட்டணி அமைத்து மதவாத அரசியல் நடத்திவரும் பாரதீய ஜனதாக்கட்சியின் ஒன்றிய ஆட்சியை அப்புறப்படுத்த வேண்டும் என்ற ஒருமித்த கருத்தின் அடிப்படையில், "இந்திய தேசிய அனைத்து மக்களின் வளர்ச்சிக் கூட்டணி" (INDIA - Indian National Developmental Inclusive Alliance) அமைக்கப்பட்டு, முறையே பாட்னாவிலும், பெங்களூருவிலும், மும்பையிலும் கூட்டங்கள் நடைபெற்று, செயல்திட்டங்கள் உருவாக்கப்பட்ட நிலையில் "இந்தியா" (INDIA) அரசியல் கூட்டணி பாரதீய ஜனதாக்கட்சியின் நாடாளுமன்றத்தேர்தல் வெற்றிக்குத் தடையாக இருக்குமோ என்ற அச்சத்தின் காரணமாகவே இந்தியா (INDIA) என இதுவரையிலும் நாடு விடுதலை பெற்று 1950ம் ஆண்டு அரசியல் சட்டம் அமலாக்கம் செய்யப்பட்ட காலத்திலிருந்து பழக்கத்திலும், புழக்கத்திலும் இருந்து வந்த பெயரை "பாரதம்" (Bharat) என மாற்றிட முயற்சிக்கிறார்கள் எனக்கருதுவதற்குரிய சூழ்நிலையை ஒன்றிய அரசு இன்று உருவாக்கியுள்ளது.

இதுமட்டுமல்ல, என்றைக்கு 2014-ம் ஆண்டு பாரதீய ஜனதாக்கட்சி நரேந்திரமோடி தலைமையில் உருவானதோ, அன்றிலிருந்து ஆர்.எஸ்.எஸ். என்கின்ற மதவாத அமைப்பின் செயல்திட்ட நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் நிறைவேற்றிக் கொண்டு வருகிறார்கள். அந்த நிகழ்ச்சி நிரலில் ஒன்றுதான் இந்திய அரசியல் சட்டத்தை சீர்குலைத்து செயலற்றதாக்குவதாகும். அரசியல் சட்டத்தின் முகவுரையில் தெரிவித்துள்ள மதச்சார்பற்ற தன்மையில் (Secularism) பா.ஜ.க.விற்கு முற்றிலும் நம்பிக்கையில்லை. ஏன்? கூட்டாசியிலும் (Federalism) நம்பிக்கையில்லை.

எனவே, கிடைக்கின்ற ஒவ்வொரு வாய்ப்பிலும் அரசியல் சட்டத்தை வலுவிழக்கச் செய்யும் செயல்களில் ஈடுபட்டுவருகிறார்கள். "இந்தியா" கூட்டணி எந்த அளவிற்கு ஒன்றிய அரசையும், பாரதீய ஜனதாக்கட்சியையும் பாதித்திருக்கிறது என்பதற்கு சரியான எடுத்துக்காட்டுத்தான் இந்தியாவிலிருந்து பாரதத்திற்கு தாவியதும், ஒரே நாடு - ஒரே தேர்தல் என்ற முழக்கமும் ஆகும்!! இது அரசியல் அச்சத்தின் வெளிப்பாடு என்பதில் ஐயமில்லை. கிராமங்களில் குழப்பவாதிகளை மந்தைகளிலும், சாவடிகளிலும் பார்க்கும் பொதுமக்கள், "இன்றைக்கு என்ன புதுக்குழப்பம்...", என்று நையாண்டியாகக் கூறி நகைப்பார்கள். இன்று, பிரதமர் மோடிஜீ அவர்களும் புதுப்புதுக் குழப்பங்களை உருவாக்குகிறார். ஆம்! குழப்பங்களும் - குதர்க்கங்களும், நரித் தந்திரங்களும் தான் தங்களின் அரசியல் ஆயுதங்களா? தமிழ்நாட்டு மக்கள் 2024-ம் ஆண்டு நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதமர் மோடியின் இந்த அரசியல் ஆயுதங்களை முனைமுறித்து தக்க விடையளிப்பார்கள்.



தமிழ்நாடு அரசின் சார்பில் மகாகவி பாரதியாரின் நினைவு நாளான, மகாகவி நாளையொட்டி நேற்று (11.09.2023) சென்னை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள மகாகவி பாரதியார் அவர்களின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, துணை மேயர் மு.மகேஷ் குமார், செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் த.மோகன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

### திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா திருவுருவச் சிலைக்கு அமைச்சர் ஐ.பெரியசாமி மரியாதை!

## அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. அறிக்கை!





*திண்டுக்கல், செப். 12 -*

*திண்டுக்கல் கிழக்கு - மேற்கு மாவட்டச் செயலாளர்கள் அமைச்சர் அர.சக்கரபாணி-ஐ.பி.செந்தில்ல்குமார் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*பேரறிஞர் அண்ணா அவர்களின் 115வது பிறந்த நாளை முன்னிட்டு திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் 15.09.2023,வெள்ளிக்கிழமை காலை 09.00 மணியளவில் கழக துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி தலைமையில் திண்டுக்கல், மணிக்கூண்டிலிருந்து பேரணியாகப் புறப்பட்டு பேறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படவுள்ளது.*

*அதுசமயம் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், மாநகராட்சி மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர், துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், ஒன்றியப் பெருந்தலைவர்கள், துணை பெருந் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள், முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் என அனைவரும் ஏராளமான தொண்டர்களுடன் கலந்துகொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.*

*இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.*

### இந்தியாவை வழி நடத்துவது அரசியல் சட்டமேயன்றி

# ஆர்.எஸ்.எஸ்.சின் ரகசிய திட்டங்கள் அல்ல!

## 'தீக்கதிர்' நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, செப். 12 -

இந்திய திருநாட்டை வழிநடத்துவது அரசியல் சட்டமேயன்றி ஆர்.எஸ்.எஸ்.சின் ரகசிய திட்டங்கள் அல்ல என்பதை உரத்துச் சொல்ல வேண்டிய நேரம் இது என 'தீக்கதிர்' நாளேடு 11.9.2023 தேதியிட்ட இதழில் "பெயர் மாற்றத்தின் பின்னணியில்" என்ற தலைப்பில் தலையங்கம் வெளியிட்டுள்ளது.

அது வருமாறு:-

மத்திய தணிக்கைக் குழு ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசின் 7.5 லட்சம் கோடி ஊழலை அம்பலப்படுத்தியதால் பதற்றமடைந்துள்ள பா.ஜ.க.வினர் இந்திய மக்களின் கவனத்தை திசை திருப்ப பல்வேறு சித்து வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

விலைவாசி உயர்வு, வேலையின்மை தீவிரம் மணிப்பூர் கலவரம் போன்ற எந்தவொரு பிரச்சினைக்காகவும் நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தை கூட்ட முன்வராத மோடி அரசு திடீரென நாடாளுமன்ற கூட்டத்தை கூட்டப் போவதாக அறிவித்துள்ளது. இந்தக் கூட்டத்தின் நோக்கம் குறித்து ஒன்றிய அரசு தெளிவு படுத்தாத நிலையில் பல்வேறு யூகங்கள் வெளியாகின்றன. ஒரே நாடு, ஒரே தேர்தலுக்கான சட்டத் திருத்தத்தை கொண்டுவரப் போவ தாகவும், பொதுசிவில் சட்டத்திற்கான அறி விப்பை வெளியிடப்போவதாகவும் பல்வேறு செய்திகள் அரசுத் தரப்பில் கசியவிடப்படுகின்றன.

இதனிடையே இந்தியா எனும் பெயரை மாற்ற மோடி அரசு முடிவு செய்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகின. இதற்கான முறையான அறிவிப்பு வெளியாகவில்லை என்ற போதிலும் ஜி20 மாநாட்டையொட்டி குடியரசுத் தலைவர் பெயரில் அனுப்பப்பட்ட அழைப்பிதழில் இந்தியா என்கிற பெயருக்குப் பதிலாக பாரத் என்ற பெயர் இடம்பெற்றது. கடும் விமர்சனமும் எதிர்ப்பும் எழுந்த நிலையில், இந்தியா எனும் பெயரை மாற்றும் திட்டம் எதுவும் இல்லை என ஒன்றிய அமைச்சர் அனுராக் தாக்கூர் மறுப்பு தெரிவித்தார்.

ஆனால், ஜி20 மாநாட்டில் பிரதமர் மோடி இருக்கைக்கு முன்னால் இந்தியா என்பதற்குப் பதிலாக பாரத் என்று இடம் பெற்றிருந்தது. அரசியல் சட்டத்தின்படி இரண்டு பெயரையும் பயன்படுத்தலாம் என்று பா.ஜ.க.வினர் கூறுகின்றனர். ஆனால் திடீரென இத்தகைய குழப்பத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியம் என்ன?

7.5 கோடி ரூபாய் ஊழல் புகாரிலிருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்புவதற்காகவே இத்தகைய சர்ச்சைகளை ஒன்றிய அரசு கிளப்பி விடுகிறது. அதேபோல ஒரே நாடு, ஒரே தேர்தல் என்ற சர்ச்சையும் கிளப்பிவிடப்பட்டுள்ளது.

இதற்காக முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இத்தகைய குழுக்களுக்கு முன்னாள் குடியரசுத் தலைவர்கள் நியமிக்கப் படுவதில்லை. ஆனால் எந்த நியதியையும் பா.ஜ.க. அரசு பின்பற்றுவதில்லை.



தீக்கதிர்
2023 செப்டம்பர் 11 திங்கட்கிழமை
பெயர் மாற்றத்தின் பின்னணியில்...

நாடாளுமன்ற ஜனநாயக முறைக்கு முடிவு கட்டி கொஞ்சம் கொஞ்சமாக ஜனாதிபதி ஆட்சி முறையை கொண்டுவரவும், எதேச்சதிகாரத்தை நோக்கி நாட்டை நடத்திச் செல்லவும் மோடி அரசு திட்டமிடுகிறது. ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அகண்ட பாரதம் என்ற செயல்திட்டத்தின் ஒரு பகுதியாகவே இத்தகைய தேவையற்ற வேலைகளை மோடி அரசு செய்து வருகிறது. இந்திய திருநாட்டை வழிநடத்துவது அரசியல் சட்டமேயன்றி ஆர்.எஸ்.எஸ்.சின் ரகசிய திட்டங்கள் அல்ல என்பதை உரத்துச் சொல்ல வேண்டிய நேரம் இது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**புதுக்கோட்டை க. வீரய்யா**
**செப்டம்பர் 12 (1993)**



**புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.**

**நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.**

**தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



தென்காசி தெற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் சிவந்தி நகரில் உள்ள மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் செல்லத்துரை தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் பங்கேற்று உரையாற்றினார். நிகழ்வில் அப்துல் காதர், செல்லப்பா, பூங்கோதை ஆலடி அருணா, கென்னடி, கனிமொழி, செரீப், ஆறுமுகசாமி, சேக் தாவுது, சேசுராஜன், ராஜேஸ்வரன், ரஹீம், சாமிதுரை, கதிர்வேல் முருகன், அழகு சுந்தரம், வல்லம் திவான் ஒலி, அன்பழகன், செல்லதுரை, சீனித்துரை, சிவன் பாண்டியன், சுரேஷ், ஜெயக்குமார், மாரி வண்ணமுத்து, ரவிசங்கர், சாதிர், வெங்கடேசன், சுடலை, முத்தையா, குட்டி, பண்டாரம், தங்கப்பா என்ற உசேன், சிதம்பரம், முத்து, ஜெகதீசன், நெல்சன், லட்சுமணன், அழகேசன், ராஜராஜன் உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




நீலகிரி மாவட்டம், குன்னூர் அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில், டாடா டெக்னாலஜிஸ் நிறுவனத்துடன் இணைந்து ரூ.34.65 கோடி மதிப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழில் 4.0 தொழில் நுட்ப மையத்தை சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன் திறந்து வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் கூடுதல் தலைமைச் செயலாளர்,தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை குமார் ஜயந்த், மாவட்ட ஆட்சியர் (பொ) நீலகிரி மாவட்டம் திருமதி. இரா.கீர்த்தி பிரியதர்ஷினி உள்ளிட்ட அரசு துறை அலுவலர்கள், குன்னூர் நகர செயலாளர் எம்.இராமசாமி, மாநில சிறுபான்மை பிரிவு துணை செயலாளர் இர.அன்வர் கான், பொதுக்குழு உறுப்பினர் கா.செல்வம், நகர மன்ற தலைவர் ஷீலா கேத்தரின், துணை தலைவர் ப.மு. வாசிம் ராஜா, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.பத்மநாபன், நகர மன்ற உறுப்பினர்கள் ஜாஹீர் உசேன், மணிகண்டன், மன்சூர் மற்றும் கோபி, உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. இளைஞரணி, மாணவரணி, வழக்கறிஞர் அணி சார்பில் கழக இளைஞரணி செயலாளர் - இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை அவமரியாதை செய்த இந்து முன்னணி,பாரதீய ஜனதா உள்ளிட்ட சங்பரிவார் அமைப்புகளை கண்டித்து நெல்லை சந்திப்பு ரெயில் நிலையம் அருகே நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் மைதீன்கான் தலைமையில் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் வில்சன் மணித்துரை, மாணவரணி அமைப்பாளர் கல்லூர் பாலா, வழக்கறிஞர் அமைப்பாளர் காமினி தேவன் ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நிகழ்வில் விஜிலாசத்யானந்த், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ், எஸ்.வி.சுரேஷ், கிரிஜா குமார், தர்மன், அருண்குமார் பேச்சிபாண்டியன், லட்சுமணன், அருள்மணி, அன்பழகன், மகேஸ்வரி, ராஜா முகமது, கந்தசாமி, நவநீதன், மீரான் மைதீன், சபீர் அகமது,செல்வம், இனியன், குருஜெசி,ரம்ஜான் அலி, அனிதா, சுப்பிரமணியன், துபாய் சாகுல், இசக்கி பாண்டியன், கார்டன் சேகர், பிரான்சிஸ், பல்க் குமார் ராஜகுமாரி, வின்சென்ட் வினோத், பத்மா, சகாய ஜூலியட், சுந்தர், ராஜேஸ்வரி, சுப்புலட்சுமி, மகேஸ்வரி, போத்திக்கண்ணு, தொப்பி மைதீன், அண்ணாதுரை, கருப்பசாமி கோட்டையப்பன், சேக்தாவுது,சௌந்தரம் முத்துராஜ், ராஜகுமாரி உள்பட கழக நிர்வாகிகள் பலர் திரளாக கலந்து கொண்டனர்.

### வேலூரில் நடைபெறும்

# முப்பெரும் விழாவில் ஆயிரக்கணக்கில் பங்கேற்க முடிவு!

## இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

இராணிப்பேட்டை, செப். 12 -

வேலூரில் நடைபெறும் முப்பெரும் விழாவில் ஆயிரக் கணக்கில் பங்கேற்று சிறப்பிப்பது என்று இராணிப்பேட்டை மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டம் சிப்காட் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி கலந்து கொண்டு பல்வேறு வகையான கருத்துகளை வழங்கினார். இதில் மாவட்டத் துணை செயலாளர்கள் மு.சிவானந்தம், குமுதா குமார், துரைமஸ்தான், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ. எல். ஈஸ்வரப்பன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயந்தி திருமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.சுந்தரம், அ. அசோகன், சி. மாணிக்கம், கலைமணி மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் நிறைவேற்ற ப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

தீர்மானம் 1 தென்னாட்டு காந்தி இந்நாட்டு இங்கர்சால் என அனைவராலும் பாராட்டப்படும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு நம்முடைய மாவட்டத்தில் ஒன்றிய, நகர, பேரூர், ஊர் கிளை, வட்டக்கிளைதோறும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து இனிப்பு வழங்குவதென தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 2 கழக முப்பெரும் விழா, பவள விழா, பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாள், தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாள் கழகம் தோன்றிய நாளை கழக முப்பெரும் விழாவாக தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் சிறப்பாக நடத்தி கழக முன்னோடிகளுக்கு விருது வழங்கி கௌரவித்து சிறப்பிப்பது வழக்கம். ஆனால் இம்முறை ஒன்றுபட்ட வேலூர் மாவட்டமாக திகழ்ந்து தற்போது வேலூர் மாவட்டத்தில் பள்ளி கொண்ட அருகே கந்தனேரியில் இந்த ஆண்டு கழக முப்பெரும் விழா நடைபெறுவது நம் அனைவருக்கும் பெருமை. இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியில் இந்தியாவின் முதல் முதல்வராக திகழ்ந்து இந்த நாட்டில் இருக்கின்ற அனைவருக்கும் பாதுகாப்பு கவசமாக விள ங்கக் கூடிய தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர்களின் ஒட்டுமொத்த உருவமாக திகழக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவரும் கழகத்தின் தலைவருமான தமிழ்நாட்டின் முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து நாடே பாராட்டுகின்ற ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க சிறப்புரை நிகழ்த்த இருக்கின்றார். அவருடன் கழக இளைஞரணியின் செயலாளர் வருங்கால தமிழகம் விளையாட்டு மேம்பாட்டு துறை மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் கலந்து கொள்கிறார். எனவே நமது மாவட்டம் முழுவதும் ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் 17ஆம் தேதி அன்று நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் நாம் அனைவரும் கலந்து கொண்டது விழாவை சிறப்பிப்பது என தீர்மானிக்கப்படுகிறது.

தீர்மானம் 3:வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம் செய்வதற்கு அரசு அலுவலர்களே நேரில் வீடு வீடாக வருகை தந்து சரி பார்க்கின்றனர். கழகத் தோழர்கள் அவர்களுடன் இணைந்து வாக்காளர் பட்டியலை சரி பார்க்குமாறும் மற்றும் வாக்குச்சாவடி பட்டியலை கடந்த வாரம் அரசு வெளியிட்டுள்ளது. அதில் உள்ள வாக்குச்சாவடிகளை சரி பார்த்து மாவட்ட கழக அலுவலகத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொ ள்கிறோம்.

தீர்மானம்:4 நாம் ஏற்கனவே வாக்குச்சாவடி நிலை முகவர்கள் பி.எல்.ஏ2 மற்றும் உறுப்பினர்கள் பி.எல்.சி. நியமித்து தலைமைக்கழகத்திற்கு ஒப்படைத்தோம் .அதில் சிறு சில மாற்றங்களை செய்து தருமாறு தலைமைக் கழகத்திலிருந்து பட்டியல் அனுப்பி உள்ளனர். அதில் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் திருத்தம் செய்து மாவட்ட கழகத்திடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்

தீர்மானம்: 5முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா நமது மாவட்டத்தில் பட்டிமன்றம் பாட்டுமன்றம் பொதுக்கூட்டங்கள் விளையாட்டுப் போட்டிகள் தெருமுனை கூட்டங்கள் சிறப்பாக நடத்தி வருகின்றோம். மேலும் விழா நடைபெறாத பகுதிகளில் மாவட்டக் கழகம் ஆலோசனைப்படி அறிவிக்கும் தேதிகளில் சிறப்பாக நடத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

நிகழ்ச்சியில் ஒன்றிய கழக செயலாளர்கள் அரக்கோணம் கிழக்கு ஆர். தமிழ்ச்செல்வன், மத்தி கே. பசுபதி, மேற்கு ஆ.சவுந்தர், காவேரிப்பாக்கம் தெற்கு எம். பாலாஜி, காவேரிப்பாக்கம் வடக்கு தெய்வசிகாமணி, ஆற்காடு கிழக்கு எம். வி. பாண்டுரங்கன், மேற்கு ஏ .வி .நந்தகுமார், கணியம்பாடி ஒன்றியம் வி.பி.எஸ் கலைசந்தர், நெமிலி கிழக்கு ஒன்றியம் பி.வடிவேல், சோளிங்கர் கிழக்கு ஒன்றியம் சந்திரன், சோளிங்கர் மேற்கு கிருஷ்ணமூர்த்தி, மத்தி எஸ்.என். பூர்ண சந்திரன், வாலாஜா கிழக்கு ஒன்றியம் எம். சண்முகம், வாலாஜா மத்தி சேஷா வெங்கட் ரமணன், திமிரிகிழக்கு ஒன்றியம் எஸ்.அசோக், மேற்கு ஒன்றியம் ஜெ.ரமேஷ், நகர கழக செயலாளர்கள் அரக்கோணம் வி.எல். ஜோதி, வாலாஜா நகரம் டி. தில்லை, ராணிப்பேட்டை நகரம் பி. பூங்காவனம், ஆற்காடு நகரம் ஏ.வி. சரவணன், மேல் விஷாரம் எஸ்.டி.முகம்மத் அமீன், சோளிங்கர் நகரம் எம் .கோபி, பேரூர் செயலாளர்கள் நெமிலி பேரூர் ஜி.ஜனார்த்தனன், தக்கோலம் எஸ். நாகராஜன், விளாப்பாக்கம் பி.கே. பாபு, பனப்பாக்கம் என். ஆர்.சீனிவாசன், காவேரிப்பாக்கம் பாஸ் என்ற நரசிம்மன், அம்மூர் பேரூர் செயலாளர் சி.பெரியசாமி, கலவை பேரூர் எஸ்.டி. சேது ரவி, திமிரி கே.பி.ஜே. தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு

# திருப்புவனம் - மானாமதுரையில் உற்சாக வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில்!

சிவகங்கை. செப். 12 -

ராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் இமானுவேல் சேகரன் நினைவு நாளில் பங்கேற்பதற்காக நேற்று 11ம்தேதி கழக இளைஞரணி செயலாளரும் , இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் மதுரையிலிருந்து கார் மூலம் பரமக்குடிக்கு சென்றார். சிவகங்கை மாவட்டக் கழகத்தின் சார்பில் திருப்புவனம் மானாமதுரையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்டச் செயலாளரும், கூட்டுறத்துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் தலைமையில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன், திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ., மாவட்ட துணைச் செயலாளர்கள் த.சேங்கை மாறன், கே. எஸ்.எம்.மணிமுத்து, முன்னாள் எம்.எல்.ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் நாகனி செந்தில்குமார், துணை அமைப்பாளர் கே.எம்.பொற்கோ, மானாமதுரை நகரச் செயலாளர் க.பொன்னுச்சாமி,

ஒன்றியச் செயலாளர்கள் எம்.கடம்பசாமி, எம். ஜெயராமன், திருமதி வசந்தி சேங்கைமாறன், துரை.ராஜாமணி, எம். அண்ணாதுரை, சுப.சின்னதுரை, வே.தமிழ்மாறன், ஆறு.செல்வராஜன், கா. வெங்கட்ராமன், மானாமதுரை ஒன்றியக்குழு தலைவர் திருமதி லதாஅண்ணாதுரை, துணை தலைவர் முத்துச்சாமி, மானாமதுரை நகர மன்ற துணைத் தலைவர் பாலா சுந்தர்,

பொதுக்குழு உறுப்பினர்கள் கு. ராஜாங்கம் த. உதயகுமார், மகளிர் அணி சண்முகப்பிரியா, ஒன்றிய, நகரக் கழக நிர்வாகிகள் சிங்காரம், மாணவரணி கார்த்தி பாஸ்கரன், மூர்த்தி, மீனவரணி அண்ணாமலை, ரவிச்சந்திரன், ஊராட்சி மன்றத் தலைவர் சண்முகநாதன், வே.கருணாகரன் காளிமுத்து, சுப.தமிழரசன், அய்யாச்சாமி, இளையான்குடி பேரூராட்சி மன்றத் தலைவர் நஜ்முதீன், துணைத் தலைவர் இப்ராஹிம், இளைஞரணி பைரோஸ்கான், பேரூர்ச் செயலாளர் நாகூர்கனி, சேகர் மகேந்திரன், சிவபுரி சேகர், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் கொத்தமங்கலம் சேது, அச்சங்குளம் முருகன், துணைச் செயலாளர் முத்துக்குமார் உட்பட பல்வேறு அணிகளின் நிர்வாகிகள், பல்லாயிரக்கணக்கான கழக தொண்டர்கள் மற்றும் தொ.மு.ச. வினர் வரவேற்றார்கள்.

### மேலூருக்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

# மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, செப் 12 -

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் வருகிற 20ந்தேதி கழக இளைஞர் அணி செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கழக முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் நிகழ்வு, முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா, சேலம் மாநாட்டில் பங்கேற்பது குறித்து மதுரை வடக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் பங்கேற்கும் ஆலோசனைக் கூட்டம் 14ஆம் தேதி காலை 10 மணிக்கு மேலூர் கலைஞர் திடலில் நடைபெற உள்ளதாக மாவட்டச் செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சருமான பி.மூர்த்தி தெரிவித்துள்ளார். இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:



மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பாக கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கு இணங்க கலைஞர் நூற்றாண்டு விழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது, இதனை மேலும் மெருகேற்றும் வகையிலும், டிசம்பர் மாதம் சேலத்தில் நடைபெறும் கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாட்டில் இளைஞர் அணியினர், கழகத்தினர் என 50 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பெரும் திரளாக பங்கேற்பது மற்றும் இருபதாம் தேதி மேலூரில் கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழாவை சிறப்புற நடத்துவது உள்ளிட்டவை தொடர்பாக மதுரை வடக்கு மாவட்டக் கழகம் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் 14.09.2023 வியாழக்கிழமை காலை 10 மணிக்கு மேலூரில் உள்ள கலைஞர் திடலில் வைத்து நடைபெற உள்ளது.

இந்த நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் மதுரை வடக்கு மாவட்ட கழக மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதி நிதிகள், கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமென மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி தனது அறிக்கையின் மூலம் கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாநிலச் செயலாளர் ப.ராணி பங்கேற்பு!

திருச்செங்கோடு, செப். 12 -

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக்கூட்டம் திருச்செங்கோடு மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப. ராணி தலைமை தாங்கினார். மாநில மகளிர் சமூக வலைதாள பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா, மாவட்ட துணை அமைப்பாளர் எம்.சாந்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.ஜோதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.ராதிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவையொட்டி மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பாக மாவட்ட முழுவதும் 25000 க்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்கள் சேர்க்கப் பட வேண்டும், நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பாக மாவட்டம் முழுவதும் மகளிர் பாசறைக்கூட்டம் நடத்தபட வேண்டும்,

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் நியமனம் செய்வது, கடந்த 06.06.2023 அன்று உடல்நிலை குறைவால். இறந்த சி.வசந்தா அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக இரங்கல் தீர்மானம் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இக்கூட்டத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் துணை அமைப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.



இந்திய சுதந்திர போராட்ட வீரர் தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது புகழை போற்றுகின்ற வகையில் நெல்லை மத்திய மாவட்ட கழக அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப்படத்திற்கு மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் ஞானதிரவியம் எம்.பி மாலைராஜா,லட்சுமணன்,தர்மன், சுரேஷ்,கிரிஜா குமார், விஜிலா சத்யானந்த், சுப்பிரமணியன், சித்திக், பரமசிவ ஐயப்பன், கனகராஜ், நமச்சிவாயம் என்ற கோபி,துபாய் சாகுல்,மணி, அருள்மணி மாரியப்பன், மேயர் சரவணன்,துணை மேயர் ராஜு அண்ணாதுரை, வில்சன் மணித்துரை கருப்பசாமி கோட்டையப்பன், காமினி தேவன், மாரியப்பன், கந்தசாமி, கல்லூரி பாலசுப்பிரமணியன், நவநீதன், மீரான் மைதீன்,இனியன், ஷாஜகான், ஷேக் தாவுது, அப்துல் ரகுமான், சீனிவாசன், அனிதா, மேரி, சௌந்தரம், லதா, இசக்கிபாண்டியன், பாலு, ஐயப்பன், தொப்பி மைதீன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

### செப்டம்பர் 12 (2019)



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**






தியாகி இமானுவேல் சேகரனாரின் நினைவு நாளையொட்டி நேற்று பரமக்குடியிலுள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்த வருகை தந்த கழக இளைஞர் அணிச் செயலாளரும் – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்ட எல்லைகளில் மக்கள் திரண்டு உற்சாக வரவேற்பளித்த காட்சி!




தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழா -
தி.மு.க. பவள விழா ஆண்டு

கலைஞர் 100 1924 - 2023

# தி.மு.க. முப்பெரும் விழா 2023

நாள் : 17-09-2023 மாலை 5.00 மணி.
இடம் : பள்ளிகொண்டா. வேலூர்

வரவேற்புரை :
**ஏ.பி. நந்தகுமார்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாவட்ட தி.மு.க.

தலைமை :
பொதுச்செயலாளர் **துரைமுருகன்**

**முத்தமிழறிஞர் கலைஞர் அறக்கட்டளை பரிசு வழங்கும் விழா**
**“கழக விருது”க்காக** தமிழகத்தில் உள்ள நான்கு மண்டலங்களில்
ஒன்றியம், நகரம், பகுதி, பேரூர் ஆகியவற்றில் கழகப் பணியில் சிறப்பாக செயல்படும் தலா ஒருவருக்கு நற்சான்று
- பணமுடிப்பு வழங்குதல்

விருது - பரிசுகள்
வழங்கிச் சிறப்புரை :
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**தலைவர் மு.க.ஸ்டாலின்**

: வாழ்த்துரை :
பொருளாளர் **டி.ஆர். பாலு**
முதன்மைச் செயலாளர் **கே.என்.நேரு**
துணைப் பொதுச்செயலாளர்கள் முனைவர் **க.பொன்முடி**
**ஆ.இராசா**
**கனிமொழி கருணாநிதி**
அந்தியூர் **ப.செல்வராஜ்**

நன்றியுரை :
**ப.கார்த்திகேயன்,** எம்.எல்.ஏ.,
செயலாளர், வேலூர் மாநகர தி.மு.க.


**பெரியார் விருது**
**திரு. கி.சத்தியசீலன்**


**அண்ணா விருது**
**திரு. க.சுந்தரம்**


**கலைஞர் விருது**
மாண்புமிகு **ஐ. பெரியசாமி**


**பாவேந்தர் விருது**
திருமதி **மலிகா கதிரவன்**


**பேராசிரியர் விருது**
**திரு.ந.இராமசாமி**

**தி.மு.க. தலைமைக் கழகம்**

# கலைஞர் என்கிற ஈர்ப்பு விசை!

■ நீரை.மகேந்திரன்



ஓவியம் : ரவி பேலட்

**க**லைஞர் நூற்றாண்டில் அவரைக் குறித்து அறிந்து கொள்வதில், புதிய ஆர்வத்தின் அலைகளைக் கவனிக்க முடிகிறது. கலைஞரை அறிந்துகொள்ள வேண்டுமெனில், கடந்த 80 ஆண்டுகால வரலாற்றை அவரே எழுதி வைத்துச் சென்றுள்ளார். எனினும், அவர் எழுதி வைக்காதவற்றின் அடுக்குகள் இன்னும் ஆழமும், அர்த்தமும் கொண்டவையாக உள்ளன.

கலைஞரை இப்போதுதான் முதல்முறையாக அறியும் தலைமுறைக்கு, தமிழ் நிலத்துக்கு அவர் செய்த அளப்பரியா அறிவு முதலீடுகளையும், நீண்ட காலச் சிந்தனைச் செல்வங்களையும் கொண்டு சேர்க்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. கலைஞரை ஓரளவு அறிந்து வைத்திருப்பவர்களும் அவரின் ஆளுமை நுட்பத்தினை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமெனச் சொல்லலாம்.

## எந்த முனையில் இருந்தும் கலைஞர்...

ஆனால், இப்போது கலைஞரை எங்கிருந்து அறிந்து கொள்வது அல்லது அறிமுகப்படுத்துவது என்கிற கேள்விக்கு எந்த சிரமத்தையும் கலைஞர் அளிக்கவில்லை. அவரை எந்த முனையில் இருந்தும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை அவர் திறந்துவிட்டுள்ளார்.

மார்க்சியத் தலைவர்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், அந்தத் தத்துவத்தின் அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய **‘பொதுவுடமை தான் என்ன?’** என்கிற நூலை வாசித்தால், ஓரளவு அந்தத் தலைவர்களின் வாழ்க்கை புரியும். இல்லையெனில், வெறும் சாகசத் தலைவர்களாக மட்டுமே எஞ்சுவர்.

அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையை அறிய, பல தொகுப்புகள் இருந்தாலும் **‘நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்’** என்கிற சிறு நூலை வாசிப்பவர்களுக்கு அவரின் சிந்தனைச் சாரம் விளங்கும்.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் அவர்களின் களப் போராட்டங்கள், புரட்சிகரமான மேடை முழக்கங்களை அறிய வேண்டியது அவசியமாகும். அதாவது நேரடியான அரசியல் அணுகுமுறைகள் மட்டுமே அந்தத் தலைவர்களை நோக்கிச் செல்வதற்கான வழிகளாக உள்ளன.

இந்த இடத்தில்தான் கலைஞர் வேறுபடுகிறார். அவரை அணுகுவதற்கு ஒரே நேர்க்கோட்டிலான பாதை என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. கலைஞரை எந்தத் திசையில் இருந்தும், எந்தத் துறையில் இருந்தும் அணுகிவிட முடிகிறது. மருத்துவம், பொறியியல் தவிர்த்து மற்ற துறைகளில் எல்லாம் அவர் உச்சம்தொட்ட ஆளுமையாகத் திகழ்ந்துள்ளார். அவர் ஈடுபடாத அந்த இரண்டு துறைகளிலும், அவரது நிர்வாகத் திறன் அவற்றின்மீது ஆளுமை செலுத்தியதையும் தவிர்க்க முடியாது.

## அரசியல் ஆர்வத்தின் காலம்

சாதாரணமாக நமது சமூகத்தில் அரசியல் ஆர்வம்கொள்ளும் வயது, அல்லது சமூகத்தைக் கவனிக்கத் தொடங்கும் வயது எனில், அது பள்ளிப் பருவம் எனலாம். கல்லூரிக் காலத்தில் அரசியலில் அவர்கள் ஆழ்ந்து செல்லக்கூடும். ஆனால், அதற்கு முன்னரான காலத்தில் குறைந்த பட்சமாக அரசியல் தலைவர்கள் குறித்த அறிமுகம் ஏற்படும். அந்த வகையில், கலைஞரை ஏதாவது ஒரு வகையில் பள்ளிப் பருவத்திலேயே அறிந்து கொண்ட தலைமுறை இருந்தது. எழுத்திலும் பேச்சிலும் திரைத்துறையிலும் என அவரது ஆளுமை கவனத்துக்கு வந்து கொண்டே இருக்கும்.

திரைத் துறையில் ஆர்வம் கொண்ட ஓர் இளைஞனோ, இளைஞியோ தனது பயணத்தின் தொடக்கத்திலேயே கலைஞரைச் சந்திக்காமல் இருக்க முடியாது. வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தமிழ் நிலத்தின் கடந்த நூறு ஆண்டுகளின் வரலாற்றை அறிய **‘நெஞ்சுக்கு நீதி’, ‘கலைஞர் கடிதங்கள்’** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இலக்கிய வாசகனுக்கு அவரது ‘குறளோவியம்’, ‘தொல்காப்பியப் பூங்கா’, ‘திருக்குறள் உரை’ ஆகிய வகைகள் உள்ளன. பேச்சிலும் அவர் கட்டிப் போட்டவர். ‘என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே’ என அவர் உச்சரிக்கும்போது ஆர்ப்பரித்த உடன்பிறப்புகளை அறிவோம்.

> **வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தமிழ் நிலத்தின் கடந்த நூறு ஆண்டுகளின் வரலாற்றை அறிய ‘நெஞ்சுக்கு நீதி’, ‘கலைஞர் கடிதங்கள்’ ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.**

சரி, இப்போது கலைஞரை எப்படி உயிரோட்டமாக வைத்துக் கொள்வது, இளையோருக்குக் கொண்டு செல்வது என்கிற கேள்விக்கு அவர் திறந்து வைத்துள்ள வாசல்களையே பயன்படுத்தலாம்.

## நிதானமும் வேகமும்

இன்றைக்கு இருக்கும் முக்கிய ஆளுமைகள் எல்லோருக்குமே, அவர்களது இளம் வயதிலேயே அறிமுகம் ஆகி இருக்கிறார் கலைஞர். அது ‘பராசக்தி’யாக, ‘மனோகரா’வாக இருக்கிறது. இன்னும் சிலருக்கு அண்ணா மறைவின்போது வாசித்த ‘கவிதாஞ்சலி’யாக நினைவில் இருக்கலாம். ஆட்சி அதிகாரமாகவும், சமூக நீதிச் சட்டங்களாகவும் அவர் மக்கள் மத்தியில் சென்றுள்ளார்.

‘பள்ளியில் சேர்வதற்காக, திருவாரூர் குளத்தில் விழுவேன்’ என நின்ற சிறு வயது முதலே, அவருடைய தன்முனைப்பும், விடாமுயற்சியும் அவரது இறுதிக் காலம் வரை தொடர்ந்தது. நமது எண்ணங்கள் நிறையவும் அதுவே காரணமாக இருந்துள்ளது.

அவரை அறிந்து கொள்ள வேண்டியதில் ஆட்சி அதிகாரத்துக்கு முன், ஆட்சி அதிகாரத்துக்குப் பின் என இரண்டு காலகட்டங்களாகவும் பிரிக்கலாம். ஆனால், இரண்டு கட்டங்களிலும் அவரது நிதானமும், வேகமும் நுட்பமான புரிதலைக் கேட்பவை. சமூகநீதிக் களத்தில் இளவயதில் நின்ற காலத்திலும் சரி, ஐந்து முறை முதல்வராக இருந்தபோதும் சரி அவர் நிதானித்துச் செயல்படும்விதம், நீண்ட கால நோக்கங்களைக் கொண்டது.

ஆட்சி அதிகாரம் வந்ததும் உடனடியாகத் தலைகீழ் மாற்றம் என அறிவித்துவிடவில்லை. ஆட்சியில் அதிகாரத்தை மிக வலுவாக ஊன்ற களத்தைத் தயார்ப்படுத்தினார் என்று சொல்லலாம். கழகத்தின் கையில் ஆட்சி வந்தது, தமிழ்நாடு பெயர் மாற்றம், சுயமரியாதைத் திருமணச் சட்டம் என அடுத்தடுத்து அண்ணா நிகழ்த்திக் காட்டினார். ஆனால், இதன் எதிர்வினைகள் சாதாரணமானவை அல்ல. இதுபோன்று, கொள்கைகளைச் சட்டமாக்கும் விவகாரங்களில் மிக நுட்பமாக ஆட்சியைக் கையாண்டுள்ளார். கலைஞர் தனது முதல் ஆட்சியின்போது கொள்கை சார்ந்தவற்றைச் செயல்படுத்தியதைவிட, வளர்ச்சி சார்ந்தவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

தொழில்துறைகளில் ஏற்படும் மாற்றம், வேலைவாய்ப்புகள் உருவாக்கம் ஆகியவை மக்களின் தன்னிறைவு வாழ்க்கைக்கு அடிப்படை என்பதால், அதற்கான வேலைகளை முதல் ஆட்சிக் காலத்திலேயே தொடங்குகிறார். தொழிற்பேட்டைகள், நதிநீர்த் திட்டங்கள், முதலீட்டுத் திட்டங்கள், மேம்பாலக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கிய ஆண்டுகளாக 1969 முதல் 1975 ஆண்டுகளைப் பார்க்கலாம். கெடுவாய்ப்பாக, பெண்களுக்கான சொத்துரிமை உள்ளிட்ட சமூகச் சீர்திருத்தப் பணிகளுக்கு அவர் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டி இருந்தது. ஆனால், வெற்றி தோல்விகள் குறித்து அவருக்கு எந்தக் காலத்திலும் பெரிதாக எதிர்பார்ப்புகள் இருந்ததில்லை. வெற்றி கிடைத்தால், அதன் மூலம் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் அவரது கையெழுத்துகள் அமைந்தன. தோல்வி எனில், அந்தக் காலகட்டத்தில் ஆட்சியில் இருப்பவர்களை முடுக்கிவிடும் சாட்டைக் குச்சியாக இருந்துள்ளதை மறுக்க முடியாது.

ஆட்சி அதிகாரம், அரசியல், எழுத்து, பேச்சு என எல்லா பணிகளிலும் அவருக்கெனத் தனிப் பாணி உண்டு. எந்த ஒரு பாணியையும் பின்பற்றாமல் தனக்கான ஒரு தனிப் பாதையை வகுத்துக் காட்டியவர் அவர். அதுதான் அவரிடத்தில் மக்களை ஈர்க்கிறது. தலைமுறைகள் கடந்தும் அந்த ஈர்ப்பு விசை, ஆற்றல் கொண்டதாகத் திகழும்.

## ::ப்ளாஷ்பேக்





### யானையை வைத்து வரவேற்பு!



எழில்அரசு

**ஒ**ருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தில், என் தாய் தந்தை, இராணி- சிவப்பிரகாசம் ஆகியோரின் திருமணம் தலைவர் கலைஞர் தலைமையில் 1975 -ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. வலங்கைமான் முருகன் திரையரங்கில், பெரிய அளவில், சடங்குகளற்ற சுயமரியாதைத் திருமணம், தலைவர் தலைமையில் சிறப்பான முறையில் நடந்தேறியதை என் தந்தை என்னிடம் அடிக்கடி கூறுவார். தலைவர் கலைஞருக்கு யானையை வைத்து மாலை அணிவித்துச் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை ப.நாராயணசாமி அவர்களும் என் தாத்தா அன்றைய ஒன்றியச் செயலாளர் ‘வட்டம்’ நா.சாமிநாதன் அவர்களும் இத்திருமணத்தின்போது உடனிருந்தனர். தஞ்சைப் பகுதியில் திரையரங்கில் நடைபெற்ற முதல் சுயமரியாதைத் திருமணம் இதுதான்.

**-சி.எழில்அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர் சங்கம், தஞ்சை மண்டல துணைத் தலைவர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

### திராவிட இயக்க இதழ்கள் - ‘நம் நாடு’



**தி**.மு.க.வின் அதிகாரப்பூர்வ நாளேடாக 1953-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது **‘நம்நாடு’** இதழ். இந்த இதழுக்கு முதலில் பேரறிஞர் அண்ணாவும், பிறகு முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் நெடுஞ் செழியன், சி.பி.சிற்றரசு, இரா.செழியன் போன்றவர்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.

‘நம்நாடு’, மாலைப் பதிப்பாக வெளிவந்து கொண்டிருந்தது. அதுவும் சிறிய அளவில் வெளியிடப்பட்டு வந்தது. அந்த இதழின் வளர்ச்சி குறித்து ‘முரசொலி’ வார ஏடாக இருந்தபோது, ‘நம்நாடு நமது ஏடு’ எனும் தலையங்கம் எழுதி, அந்த இதழின் அவசியத்தை வலியுறுத்தி இருந்தது.

அந்த இதழை மீண்டும் 1978-இல் கலைஞர் அவர்கள் தி.மு.க.வின் வார ஏடு என அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். 1979-ஆம் ஆண்டு வரை அந்த வார இதழ் வெளிவந்தது. அதற்கு கலைஞரே ஆசிரியராக இருந்தார்.

நாளிதழாக இருந்தபோது 4 பக்கங்களுடனும், வார இதழாக வந்தபோது 12 பக்கங்களுடனும் வெளிவந்தது. தொடக்கத்தில், இதழின் பெயருக்குக் கீழே, ‘The Official Organ of D.P.F.’ என்று அச்சிடப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சொற்கள் ஆங்கிலத்தில் பொருள்படும்படி Dravidian Progressive Federation (DPF) என்று குறிப்பிடப்பட்டுள்ளன. பின்னாளில் அது ‘The Official Organ of D.M.K’ என்று குறிப்பிடப்பட்டு வந்தது.

### கருவூலம் மழை, சகதியிலும் மாநாடு!

**1978-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 23, 24 தேதிகளில் திருச்சியில் கழகத்தின் சார்பில், மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தலைமை ஏற்றார். மாநாட்டுத் திறப்பாளர் கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வை.கோ. மாநாட்டின் இரண்டாம் நாள் மழை பெய்து, மாநாட்டுத் திடல் முழுவதும் சகதி ஆனது. ஆனாலும், மழையில் நனைந்துகொண்டே தலைவர்களின் உணர்ச்சிமிக்க உரைகளை மக்கள் கேட்டனர்.**

### சோதிடந்தனை இகழ்!

**ஜா**தி எதிர்ப்பாளராகவும், மதம், கடவுள்மறுப்பு பகுத்தறிவாளராகவும் திரைப்படக்காரராகவும் இருந்தவர், சாகும் வயதில்லைதான். செத்துவிட்டார் இப்ப என்ன? பகுத்தறிவாளர்களுக்கு சாவே வராது என்றெல்லாம் புத்தர் தொடங்கி, எந்தப் பகுத்தறிவுவாதியும் இயற்கைக்கு சவால்விட்டு வாழ விரும்பியதுமில்லை. அப்படியான வாய்ச்சவடால்கள் அடித்ததுமில்லை.

அற்ப முட்டாள்கள் முக்கால் கிலோ மூளையை ஜாதிவெறிக்கும் மூடநம்பிக்கைக்கும் அஞ்சி நடுங்கி பயன்படுத்தாமலே செத்துப் போகக்கூடியவை சில, அவர் ஜோசியத்தைப் பழித்ததனால் சீக்கிரம் செத்தார் எனக் கெக்கலிக்கொட்டுகின்றன.

‘சோதிடந்தனை இகழ்’ என ஆத்திச்சூடி எழுதிவைத்து அதை இயக்கமாக நடத்திய மண் இது.

இளங்கோதான் அரசனாவான் என்கிற அரண்மனை சோதிடத்தைப் பொய்யாக்கி, புலவனாகி அய்ம்பெரும் காப்பியங்களிளொன்றை தந்துவிட்டு துறவியானவனின் வரலாறுகொண்ட மொழிபூமி இது.

மாரிமுத்துவை ‘பரியேறும் பெருமாள்’ வந்தகாலத்திலிருந்து கவனித்து வந்திருக்கிறேன் அந்தப் படத்தைச் சொந்தப் படம்போல ஆதரித்து விவாதித்து வந்ததைப் பல நேர்காணல்களிலும், ஒரு முறை மாரிசெல்வராஜோடு நேரிலும் கண்டுள்ளேன். அண்மைக் காலக் கலைத்துறையின் இழப்பு ஒன்றை தமிழகத்தின் மிக முக்கிய இழப்பாக உணர்ந்து மக்கள் இரங்கல் குறிப்புகளாய் வரைந்து குவிக்கின்றனர். பக்தர்களாய் இருப்பவர்கள் பலநேரங்களில் தங்களால் இயலாததைப் பகுத்தறிவாளர்கள் சமூக அக்கறையோடு செய்யும்போது ரசிப்பார்கள் நேசிப்பார்கள்.

தமிழகத்திற்கேயான தனித்துவப் பண்பு அது.

**-கருப்பு நீலகண்டன் ஃபேஸ்புக் பதிவு**




Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21-23 RNI No.1244/57 WPP No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131